திரை ஒளி

T-UN-686

1948 பொங்கல் மலர் 1·8·0

...விரைவில்...

வெளிவருகிறது...



ஸ்டார் கம்பைன்ஸ் & ப்ரகதி பிக்சர்ஸ்

.... தயாரித்த ....

சம்சாரநௌகா

(தமிழ்)

T. பிரேமாவதி • B.R. பந்துலு
T. சூர்யகுமாரி • T.R. ராமச்சந்திரன்
M.J. ஆண்டாள் • R. கிருஷ்ணமூர்த்தி
T.K. உபேந்திரா • கல்யாணம் • மதுரம்
நடித்தது

கதை & டைரக்ஷன்: H.L.N. சிம்ஹா , ஸ்டுடியோ: ப்ரகதி

G.N. RAO

சென்னை, வட & தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் ஜில்லா & பாண்டிச்சேரி: நேஷனல் பிக்சர்ஸ், வேலூர்

விவரங்களுக்கு: ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட் மவுண்ட் ரோட்......மதராஸ் - 2

விரைவில்
வருகிறது
T.R.மஹாலிங்கம்
M.V.ராஜம்மா
நடித்த
சிட்டாடலின்
ஞானசௌந்தரி
D.பாலசுப்ரமண்யம் P.R.மங்களம்
P.S.சிவபாக்யம் P.G.வெங்கடேசன்
C.V.நாயகம், புளிமூட்டை ராமசாமி
B.சாரதாம்பாள் லலிதா & பத்மினி
ப்ரொடியூஸர் & டைரக்டர் :- F.நாகூர்
ஜோஸப் தளியத் JR
ஸ்டுடியோ: நியூடோன்
THE CITADEL FILM CORPORATION LTD.
MADRAS. 10
E.P.
VENDHAN

Malabar Rights. SREE VANCHI FILMS TRIVANDRAM

உங்கள் குழந்தை!

இந்த உலகத்தில் ஒரு

★ அறிஞன்

★ விஞ்ஞானி

★ அரசியல் தலைவன்

★ வழிகாட்டி

★ கவிஞன்

உண்மையா என்று கேட்கிறீர்களா! ஆம். முற்றிலும் உண்மை. உண்மையாக வேண்டுமானால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். குழந்தையின் மன நிலை யறிந்து தக்கவாறு அறிவை வளர்க்க வேண்டும். அறிவை வளர்க்க உங்களால் ஓரளவுதான் நேரத்தைச் செலவிட முடியும். முழு நேரத்தையும் அவர்களுக்காகச் செலவிட ஒருவர் உண்டு. அவர்தான் 'அணில்.' வாரம் ஒரு முறை உங்கள் வீட்டுக்கு வருவார். அவருக்கு நீங்கள் கொடுக்கவேண்டியது சன்மானமாக வருடத்திற்கு ரூ. மூன்றுதான். உங்கள் ஊர் 'அணில்' விற்பனையாளரிடம் வாரந்தோறும் ஓரணாக் கொடுத்தால் போதும். சக்தி காரியாலயம், சென்னை—14. என்ற விலாசத்திற்கு ரூபாய் அனுப்புங்கள்.

பொங்கல் வெளியீடு

குஹன் பிக்சர்ஸ்

தயாரிப்பு

V. குமார்

T. V. சேதுராமன்

P. G. வெங்கடேசன்

K. S. அங்கமுத்து

P. R. மங்களம்

ராஜேஸ்வரி, வனஜா

★

டைரக்ஷன் : ஜவேரி-குமாரஸ்வாமி

சங்கீதம் :
K. V. மஹாதேவன்

★

ஸ்டுடியோ:
நெப்ட்யூன்



குஹன் பிக்சர்ஸ் லிமிடெட்,

55, புரசவாக்கம் ஹைரோட் :: மதராஸ் 7.

திரை ஒலி

மலர் 1 | சர்வசித்து, தை | இதழ் 12

பொருள் அடக்கம்

இந்த மலர்	...		2
" அண்ணு "	...	"ஸம்ஸாரி"	3
செய்திப் படங்கள்	...	"பல்குநன்"	9
நாட்டியம்	...		13
அழகுக்கு அழகு செய்தல்	...	பி. வி. வி. பி.	17
குற்றம் எங்கே?	...	எ. எஸ். எ. சாமி பி. ஏ. (ஹானர்ஸ்)	21
கலைப்பித்தா, பண ஆசையா?	...	ராஜு	23
நடிகையின் குரல்	...	ரங்கராஜன்	26
ராம ராஜ்யம்	...	வலம்புரி சோமநாதன்	29
வித்தியராணி	...		32
பேனுவையும் பட்டயத்தையும் விட வல்லமையுள்ளது	...		33
புரியவில்லை	...	தமிழ்வாணன்	35
ஒற்றுமை வேண்டும்	...	ஜி. பட்டு ஐயர்	43
ஸைலஜாவின் கண்ணீர்	...	ஆர். வி. பார்ஸி	44
ஸ்டுடியோ செய்திகள்	...		46

மூவர்ணப் படங்கள்

T. R. ராஜகுமாரி
M. M. தண்டபாணி தேசிகர்
பானுமதி

★

ரஞ்சனு
ஜெயஸ்ரீ
U. R. ஜீவரத்னம்

"திரை ஒலி" அடுத்த இதழிலிருந்து

படவுலக நினைவுகள்

●

ஸ்ரீ மஞ்சேரி எஸ். ஈச்வரன்

தொடர்ந்து எழுதுகிருர்.

இந்த மலர்

சுதந்தரப் புது வருஷத்தில் பூத்த பூவாக, 'திரை ஒலி'யின் இந்த விசேஷ மலர் மலர்ந்திருக்கிறது. இது சிறப்புடன் வெளி வர உதவிய அன்பர்கள் பலர். முக்கியமாகப் படத்தொழிலில் ஈடுபட்ட அநேக அன்பர் இதற்கு ஆதரவு புரிந்திருக்கிறார்கள். தொடங்கி ஒரு வருஷத்துக்குள்ளாகத் 'திரை ஒலி' இந்தச் சிறப்பை அடையுமாறு அதை வளர்த்து வந்த பெருமையில் பெரும் பங்கு வாசகர்களுக்கு உரியதாகும். மற்றும் கலைஞர், நட்சத்திரங்கள், எழுத்தாளர்கள் இவர்களின் ஆதரவும் கூட்டுறவும் 'திரை ஒலி'யின் வளர்சிக்குப் பெரிதும் காரணமாகும். இந்த அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நமது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

நாட்டிலே நல்ல படங்கள் வரவேண்டுமென்று யாருக்குத்தான் ஆசையில்லை? படமுதலாளிக்கு, டைரக்டருக்கு, டெக்னீஷியன்களுக்கு, நடிகருக்கு, தியேட்டர் காரருக்கு, விமர்சகருக்கு, மக்களுக்கு இந்த எல்லாருக்கும் அதில் ஆசையே. ஆனால், நல்ல படங்கள் வரவில்லை—வரவேயில்லை—என்று அநேகமாக எல்லாருமே ஒப்புக்கொள்ளுகிறோம். குற்றம் யார்மீது? எல்லார் மீதும் இருக்கலாம்; அல்லது சிலர்மீது மட்டிலும் இருக்கலாம். யார்மீது குற்றமோ, யார்மீது இல்லையோ. இன்றைய நிலையில் விமர்சகன்மீது மட்டிலும் குற்றம் இல்லவேயில்லை. விமர்சகன் குறைகளைச் சொல்ல வேண்டியவன்; நிறைகளையும் சொல்ல வேண்டியவன்தான். ஆனால், ஒட்டகத்தைக் கொணர்ந்து எதிரே நிறுத்தி, "இதிலே கோணல் இல்லாத இடம் ஒன்றைச் சொல்லேன்" என்று கேட்டால், அவன் என்ன செய்வான்? நல்ல வார்த்தை சொல்லவில்லையே என்று அவன்மீது யாரும் எரிந்து விழுந்து பயனில்லை. அவனது சுவை நயம் முக்கியம்; நோக்க விரிவு முக்கியம்; நல்லெண்ணம் முக்கியம். இவற்றுக்கு மற்றவர் மதிப்புச் செலுத்த வேண்டும்.

'திரை ஒலி' பல படங்களை-படத்தொழிலில் ஈடுபட்ட பலரை-பல சமயங்களில் நிர்த்தாட்சண்யமான சொற்களில் குறைகூறியிருக்கலாம். ஆனால், அத்தனைக்கும் காரணம், யார்மீதும் விருப்பு வெறுப்பு அல்ல. படங்களின் முன்னேற்றத்திலே, கலைவளர்ச்சியிலே, உள்ள ஆர்வந்தான் காரணம்; நல்லெண்ணம்தான் அடிப்படை. 'சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிற மனிதர்; அழ அழச் சொல்லுவார் தம் மனிதர்.' 'திரை ஒலி' படத்தொழிலின் உற்ற நண்பன். தொழில்சம்பந்தமான எதையோ யாரையோ குறைகூறிய சமயங்களில் 'திரை ஒலி' தன்னை மீறி ஏதேனும் கடுமையான சொற்களைப் பிரயோகித்திருந்தால், அதற்கு நண்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். இனி மேலும் அப்படிப் பல சந்தர்ப்பங்கள் நேரலாம். அதற்கும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

ஷேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன் மகா இக்கட்டான ஒரு நிலையில் ஒரு யூதனைக் கடன் கேட்கப் போகிறான். "சந்தைக் கடையிலே என்னைக் கண்டு காறி உமிழ்ந்தாயே; திட்டினாயே. அதே என்னிடம் வந்து இப்போது கடனுக்கு நிற்கிறாயே!" என்று இடித்துக் காட்டினான் யூதன் ஷைலக். "ஆம். நேற்றல்ல. நாளைக்கும் அப்படித்தான் உன்னைக் காறி உமிழப்போகிறேன். திட்டப் போகிறேன். உனக்கு இஷ்டமானால், இப்போது எனக்குக் கடன் கொடு" என்றான் உத்தம வர்த்தகன். படவிமர்சனங்களில் விமர்சகன் கொள்ள வேண்டியது இந்த தீரமான நிலைதான். 'திரை ஒலி' என்றும் இந்த நிலை பிறழாது நிற்கும் உறுதியைப் பூண்டிருக்கும். அதற்கு அன்பர் அனைவரும ஆசிதர வேண்டும்.

இந்தச் சமயத்தில் மற்றொரு சந்தோஷச் செய்தியையும் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதுவரையிலும் புதுகோட்டைச் சமஸ்தானத்தில் ராயபுரத்தினின்றும் வெளி வந்துகொண்டிருந்த 'திரை ஒலி'யின் காரியாலயம் சென்னை சேர்ந்துள்ளது. அடுத்த இதழ் தொடங்கிப் புதிய அம்சங்களும் அபிவிருத்திகளும் கொண்டு 'திரை ஒலி' சென்னையிலிருந்தே வெளிவரும்.

அன்பர்கள் இன்றளவும் அரவணைத்து வளர்த்த தங்கள் 'திரை ஒலி' மேலும் மேலும் வளர, ஆதரவும் ஆசியும் இனியும் உதவ வேண்டும். நமஸ்காரம்.

ஜூபிடரின் அபிமன்யுவில் U. R. ஜீவரத்னம்

மதனமாலாவில்
பிரதமநடிகை
ரஜினி

"அண்ணா"

"ஸம்ஸாரி"

அவன் :

நான் எம். பி. பி. எஸ்., தேறியபின் எனக்கு ஏனோ இந்தப்பட்டண வாசமே பிடிக்கவில்லை. எங்காவது கிராமாந்திரத்திற்குப் போய் 'ஹாய்யா'க ஒரே ஆஸ்பத்திரியை வைத்துக்கொண்டு, சீக்கிரத்திலேயே, ஒரே டாக்டர் என்ற மகிமையில், புகழடைய வேண்டுமென்ற எண்ணம் எனக்கு வெகு நாளாக உண்டு. டாக்டருக்குக் "கைராசிக்காரன்" என்ற பட்டம் கிடைக்க உண்மையிலேயே என் கைராசியும் நன்றாக இருக்க வேண்டுமே? ஆகவே, கிராமந்திரமும் இல்லாத, பட்டணமும் இல்லாத ஊரொன்றைத் தேடித், 'தனி அரசு' செலுத்த எண்ணி அலைந்தேன்.

இந்த சமயத்தில்தான் பேப்பரில் நான் கண்ட விளம்பரம் என்னைக்கவர்ந்தது.

"மேல்கொண்டா புரத்தில், புதிதாகக் கட்டப்பட்டு வரும், சர்க்கார் சிப்பந்திகளின் காலனிக்கு, எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற ஒரே டாக்டர் தேவை!" என்பதே அது.

மேல்கொண்டாபுரம் நான் அறிந்த ஊரே. காவரியாற்றங்கரையில், அமர்ந்துள்ள அந்த "கிராமபட்டிணம்" வேலூருடன் பஸ்ஸால் இணைக்கப்பட்டிருந்தது. நான் விண்ணப்பம் செய்து கொள்ளவே சீக்கிரமே வேலை கிடைத்துவிட்டது. தகப்பன் எனக்கில்லாததால் நான் யாருக்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. நல்லவேளை! "என்னைத் தொடர்ந்து" வர "என் கால்கட்டு" ஒன்றும் கட்டிவைக்காமலேயே என் பெற்றோர்களில், என் தாய் இன்னும் இருக்கிறாள்! தாய் சொந்த ஊரில், சித்தப்பாவாததில் இருந்துகொண்டு, நிலபுலன்களைக் கவனித்து வந்தாள்.



வத்ஸலா கல்யாணத்தில் டி. பாலசுப்ரமண்யமும் பத்மாபாயும் "பலராமர், ரேவதி"

வீடு வீடென்றலைந்த எனக்கு வீடொன்றைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பை லக்ஷ்மி நரசிம்மன் ஏற்றுக்கொண்டார். அவர் அந்த ஊரில் கொஞ்சம் செல்வாக்குள்ளவராம்! பணத்திலல்ல! வாக்சாதுர்யத்தில்? தாலுகா ஆபீஸ் ஹெட்கிளார்க்காக இருந்தார். மிகுந்த சாந்த சுபாவமுள்ளவர். கடைசியில் நானே எதிர்பார்க்காமல், அவர் வீட்டிலேயே எனக்கு ஒரு 'போர்ஷனை' கொடுத்துதவியதுமல்லாமல், எல்லா சௌகரியங்களையுமே செய்துகொடுத்தார். அவர் வீட்டு மாடியிலேயே அறையொன்றும் எனக்காக ஒழித்துத்தரப்பட்டது.

இவ்வளவு உதவிசெய்த அவருக்குதவி செய்ய நான் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் அவருடன் பேசும்போது நடந்து கொள்ளும் விதம், எனக்கு "சங்கோஜப் பேர்வழி" என்ற பட்டத்தையும் வாங்கிச் சூட்டியது. இதனால், எனக்கு ஒருவிதத்தில் நன்மையே ஏற்பட்டதெனலாம். ஏனெனில், என்னை தெரிந்தவர்கூட வீட்டிற்கழைக்க எண்ணவில்லை. இருப்பினும் என் குறி தவறவில்லை.

மேல்கொண்டாபுரத்தில் "ஹைஸ்கூல்" ஒன்றுண்டு. அங்கு தான் அவள் படித்து வருகிறாள், என்பது எனக்குத் தெரியும். உதவிச் சம்பளம் பெற்று, ஐந்தாவது பாரம் வாசிக்கிறாள் என்று கேட்கும் போது என் மனம் குதூஹலப்பட்டது. கமலாவை நான் நேரில் பார்க்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டதேயில்லை. அவர்களிருந்துவந்த பாகத்திற்கும், நான் இருந்துவந்த பாகத்திற்கும் "மறைவு" சரியாகப் போடப் பட்டிருந்தமையால் நான் அவள் பேசுவதையே கேட்பேன். காலையிலிருந்து மாலைவரை, என்னை மகிழ்விக்கத் தானோ என்னவோ, கல கல வென்று மணி

ஒலித்தமாதிரி, பேசிக்கொண்டேயிருப்பாள். பள்ளி சென்றவுடன், எனக்கு "வெறிச்" சென்றிருக்கும். அநேகமாக அவள் பள்ளி செல்வதற்கு முன்பே நான் வெளியே சென்று விட்டு, அவள் திரும்பிய பின்தான் திரும்புவேன். சிலசமயம் அவளை வழியில் காண எண்ணுவேன். "சங்கோசம்" என்னைப்பிடித்து ஆட்டிவைக்கும். அவள் தான் நரசிம்மனின் ஸ்ரீமந்தப் புத்ரி. பதினைந்து வயது நிரம்பிய 'குழந்தையாக' அவள் பெற்றோர்களுக்குத் தோன்றினாலும் எனக்கு, அன்றலர்ந்த அல்லி மலரென்று தோன்றினாள். நான் பட்டம் பெறும் வரை எவ்வளவோ பெண்களுடன் பழகி வந்திருக்கிறேன். பேசியிருக்கிறேன். இருப்பினும் அப்போது நான் கொண்ட உணர்ச்சி, என் "படிப்பு நாட்களில்" ஏனோ ஏற்படவில்லை. தூரத்துப் பச்சைதான் பார்வைக்கு அழகோ? நான் "டிஸ்பென்ஸரியில்" இருந்து கொண்டே என் "கம்பவுண்டரை" உள்ளே சென்று 'தண்ணீர் எடுத்து வா' வென்று ஏவும் போது, கமலாவிடமே அனுப்புவேன். காரணம் அதைச் சாக்காக வைத்துக் கொண்டாவது என்னை வந்து பார்க்கமாட்டாளா என்ற ஏக்கம்!

அவள் என்னைப் பார்த்து, கவனித்து வந்தாளோ என்னவோ, எனக்கு அவள் மேல் தனி "நேசம்" பிறந்தது. என்னை நம்பி-ஒரு யுவனைநம்பி—எனக்கு வீட்டில் அடைக்கலம் கொடுத்த நரசிம்மனை மனதார வாழ்த்தினேன்.

கமலாவுக்குக் காய்ச்சல் என்று நரசிம்மன் சொன்ன போது எனக்கே காய்ச்சல் வந்த மாதிரி உணர்ச்சி ஏற்பட்டது! மார்பைத் தடவி விட்டுக்கொண்டேன். தலையைப் பிடித்து விட்டுக்கொண்டேன். நரசிம்மம், தலைவலியோ?" என்று கேட்டார். 'இல்லை, யென்று மழுப்பிக் கொண்டே அவர் வேண்டுகோளின்படி, என் வெகு நாளைய விருப்பப்படி, அவர் வீட்டினுள் அன்று தான் முதன் முதலில் புகுந்தேன். என்கண்களில் படாமல் தப்பித்து வந்த கமலாவை அன்று தான் கரம்பிடித்து பார்க்கப் போகிறேன்! அது மட்டும்மா? அவள் நாடியின் துடிப்பையும், "ஸ்டெலஸ் கோப்பினால்" அவள் மனோநிலையையும், அல்லவா அறியப்போகிறேன்?

நல்ல காய்ச்சல், கண்ணைத்திறவாமல் படுத்திருந்தாள். நான் அவள் கையைப் பிடித்த போது என்னை அறியாமல் ஏதோ ஒரு உணர்ச்சி, ரத்த ஓட்டம் என் தேகத்தில் படர்ந்தது. மயிர்க்கூச்செறிந்தேன். அவள்,



"வத்ஸலா கலியாணம்" துரியோதனன் தர்பாரில் நாரதர்

'வெடுக்' கென்று கையை இழுத்துக் கொள்ளவும், நரஜிம்மம் அதுவரை, அயர்ந்திருந்த அவளை அழைத்தார். கண்ணைத் திறந்த அதள், மிகுந்த சிரமத்துடன், "நீங்களா?" என்றாள். "ஆம், கவலைப்படதே! எழுந்துவிடுவாய்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன். என்னையே அவள் நான், மறையும்வரை பார்த்துக் கொண்டிருப்பதை நான் அறிந்தேன். அவள் கண்களில், ஏக்கத்தின் கோடொன்று படர்ந்து இருந்தது.

உண்மையில் அவளுக்கு நல்ல டைபாய்டு ஜுரம். என்னை நம்பி, ஒப்படைத்துள்ள போது, எனக்கில்லாதபொறுப்பு அவர்களுக்கேன்? ஆகவே அவள் பெற்றோர்களிடம், பித்தஜுரம் என்று சொல்லிவைத்தேன். கமலத்தைக் கண் காணித்துக் காக்கும் பொறுப்பு எனக்கு பதினைந்து நாட்களுக்குச் சார்ந்தது. அனேகமாக, அவள் தனித்திருக்கும்போது, உள்ளே நுழைவேன். அவளைத் தனியாய்த்தேற்றிவிட்டுப் பின்வாங்குவேன். என்னையறியாமல் இதில் இன்பத்தைக் கண்டேன். இது என் அனுதாப உணர்ச்சியின் பலனா அல்லது காதலா? மறுபடியும் அவள் வீட்டில் கமலாவின்குரல் கேட்கச் செய்ததும் என்பெரிய பொறுப்பினின்றும் விடுவித்துக் கொண்டேன். ஆனால், என்னை நம்பி, அவள் என்னைக் காணவரவில்லை. நானும் போவதை நிறுத்திக் கொண்டேன். மறுபடியும் பழையநாடகம்? இருப்பினும் என்ன? தனித்திருப்பின் அன்பு அதிகமாகுமாமே?

என் நண்பனின் கடிதம் என்னை பம்பாய்க்குப் புறப்படத் தூண்டியது. பாலன் என்றுமே பொய் பேசமாட்டான். "காரியமிருக்கிறது, புறப்பட்டுவா!" என்றழைத்தால் அதில் என்ன பொய்பிருக்கமுடியும்? புறப்பட்டுப் போனேன். போகும்போது, என்னவோ, எல்லோரிடமும் சாதாரணமாக, வாக்கைக்காப்பாற்றிக் கொள்வேன் என்று

எண்ணித்தான், "போய்வருகிறேன்!" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டேன். ஆனால் நான் கண்டேனா, பாலன் வலைபோட்டு வீழ்த்துவான் என்பதை? நான் "போய் வரவேயில்லை!"

பம்பாய் வந்த என்னை அவன், மாமனார் ஆரம்பித்து நடத்த விரும்பிய அந்த ஆஸ்பத்திரியில், என்னை பிரதம சர்ஜனாக நியமித்ததை வேண்டாவெறுப்புடனேயே ஏற்றுக்கொள்ள வேண்டிவந்தது. பணம் அவனுடையது எனினும், என்னை அவன் நண்பனென்ற முறையில் கௌரவித்தபோது வெறுப்பானேன் என்பதே என் எண்ணம். அன்றேநான் கமலாவை மறந்தேன், என்றுதான் சொல்லவேண்டும். அப்பா, இந்த "ஒண்டி" ப்பிழைப்பிற்காகவா, அன்று அவ்வளவு சிரமப்பட்டேன்? நல்லவேளை, காதல் பித்தம் தலைக்கேறி, கமலாவிடம் உறுதிகூறுமல் வந்தேனே, பிழைத்தேனே? பாலன், தன் "கிளார்க்கை" அனுப்பி, சாமான்களை ஒப்புவித்துவிட்டு, என் சாமான்களுடன் திரும்ப அனுப்பிவைத்தான். நான் வேலையை ராஜிநாமாச்செய்துக் கடிதமும் அனுப்பிவிட்டேன். குமஸ்தா சென்று, காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பினான். யாரோ, ஒரு பெண் கேட்டாளாம், "டாக்டர் வரவே மாட்டாரா?" என்று! "ஆம்!" என்று சொல்லிவந்தானாம். அப்பெண் ஏனோஅழுதே விட்டாளாம்! "யாரோ, சார், நீங்கள் அப்பெண்ணிற்கு என்னஉதவி செய்தீர்களோ?" என்று அவன் அங்கலாய்த்தான். பாபம்,

"கங்கண"த்தில் கே. ஆர். ராமசாமியும் மேனகாவும்

கமலா! நான் அவளை அடைய முயற்சிக்கவில்லை? அவள் எனக்குச் சமானமற்றவள் என்றா? அல்லது ஏழ்மையா? 'காதல்' என் மனத்தில் கனிந்தது போதாதோ? என்னால் பதிலளித்துக்கொள்ளவே முடியவில்லை. கமலா அடிக்கடி கடிதம் எழுதினாள். நான் பதில் போடாமல் வாளாயிருக்கவும், கடிதமும் வருவது நின்றுவிட்டது.

நான் நினைக்கவில்லை, டாக்டர், அம்புஜம் என் ஆஸ்பத்திரிக்கு வருவாளென்று. பாலன், சொல்லி அனுப்ப, அவள் என்னைக் காணவந்த அன்றைக்கே, என்னை ஆட்கொண்டு விட்டாள் என்றுதான் சொல்லவேண்டும். அவளைப் பரீக்ஷிக்காமலேயே ஏற்றுக்கொண்டு விட்டேன்.

கமலா, கமலா, என்று நான் துடித்துக்கொண்டிருந்ததுபோக, 'கமலா'வை அழித்து, அந்தஇடத்தில் மனதில் அம்புஜத்தை அடைத்தேன். நாளடைவில், எனக்கு அம்புஜத்தை வாழ்க்கைத் துணைவியாக்க பாலனே ஏற்பாடு செய்தான் என்றால் மிகையாகாது. ஏனெனில், அம்புஜத்தைத் தேடிப்பிடித்தது இரண்டு காரணங்களை உத்தேசித்து என்று எனக்குத் தெளிவாக்கிவிட்டான் அவன். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! பலே! அவன் மனைவி அம்புஜத்தை நன்கு அறிவாளாம்!

மணத்தின்போது எனக்கு வந்த "வாழ்த்துரைகளை" பார்தலிலேயே உடைத்தேன். என்ன ஆச்சர்யம்! "நீடூழி வாழ்க" என்ற இரு வார்த்தைகளில் கமலா எங்களை ஆசீர்வதித்து, அதன்மூலம் என் சிந்தனையை ஓடவிட்டிருந்தாள். கமலா வருத்தமுறுவாள் என்று நான் கடிதம்கூட போடாதபோது அவள் எவ்விதம் அனுப்பினாள்? உண்மையில், 'மணமக்களுக்கு' என்றுவிலாச மிட்டிருப்பினும், கமலாவை, நான் அறிவேன் என்பதை என் மனைவி அப்போது அறியாள். ஆகவே, அவள், கமலாவை, தன் பள்ளித்தோழியென்றபோது, நான் பேசாமல் வாய் புதைத்தேன், இல்லாவிடில் விபரீதமல்லவா நேரிடும்? "பாபம், கமலா!" என்றது என் வாய்! 'துரோகி!' என்றது என் மனம்! என் மனம் பலவாறு அல்லலுற்றது. வரண்ட பாலைவனத்தில் கண்களைக் கட்டிவிட்டு, விளையாடச் சொல்லுவதுபோன்ற உணர்ச்சியுடன், என் வாழ்க்கையைத் தொடர நேர்ந்தது!

நான் எண்ணினேன், அவள் என்னை அவ்வளவு தூரம் நேசித்து விட்டு என்னை மறந்து மணப்பாளா என்று. என் பேதைப் புத்திக்கு, ஆணுக்குள்ள உரிமை பெண்களுக்குமுண்டு

என்று எண்ணவேயில்லை. இருப்பினும், உண்மையில் அவள் பெற்றோர்களுக்குப் பயந்தே மணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டிருப்பாள் என்று தீர்மானித்து மனதைத் தேற்றிக் கொண்டேன்.

மணப் பத்திரிக்கையை அவளே அனுப்பி யிருந்தாள். மாப்பிள்ளையாகப் போகிற வரும் அனுப்பியிருந்தார். அவள் பெற்றோர்களும் அனுப்பியிருந்தனர். சந்தோஷம், 'காதலை' அன்று வெளிப்படுத்தாமலிருந்தேனே? பிழைத்தேனே? அன்று நான் கொண்டிருந் தது காதலல்ல; சகோதர மனப்பான்மையே! இல்லாவிடில் இன்று அவள் அதே ஸ்தானத் தில் அவருக்கு வாழ்க்கைப் படுவானேன்? இதை அப்படியே குறித்து வைத்துச் சமா தான மடைந்தேன். என் ஆசீர்வாதங்களும் அனுப்பி வைத்தேன்.

அவள் :

"துரோகி! நம்பினவளை நட்டாற்றில் விட்ட இவர் உத்தமராம்! என் பெற்றோர் களின் வீண் புகழுரை! வீண்சாகசம்! நான் ஏழை யென்றிருப்பின் அன்றே தெரிவித் திருக்கலாமே? தன்மேல் குற்றம் இருக்க நான் போட்ட கடிதங்களுக்குக்கூட பதில் இல்லை! நான் பெருமூச்செறிந்தேன்! பிரயோ ஜனம்? காதல் எனின் ஏழ்மையும் ஏழ்மைக் கும் தான் என்று நான் எண்ணவில்லை. பின் நான் அவரிடம் கொண்டது காதலல்லவோ. காதலென்றால், ஏன் நான் கடிதங்களில் எழுதும் போதும் கூடத் தெரிவிக்கவில்லை? இல்லை நேரிலாவது பேசியிருக்கக்கூடாதா? என்னசெய்தும் நான் தோற்றேயிருப்பேன்?

டயரக்டர் நம்பியார்

அன்று நான் அவர் அறையில் அதைக்கண்ட போதே தெரியும். அவர் சாவியை எங்க ளிடமே கொடுத்து விட்டு, முக்கிய பெட்டி படுக்கைகளை மட்டும் எடுத்துச் சென்றார். ஒரு நாள் என் தகப்பனில்லாதபோது அவர் அறையை திறந்து பார்த்தேன், என்னைக் கவர்ந்தது பச்சைப் பசேலென்ற அட்டை யுடன் 'தலைகாணி' போலிருந்த அந்த புத்த கம்! ஹோமியோபதியைப் பற்றி எவரோ தன் அனுபவங்களை எழுத்தாகப் பொறித்தி ருந்தார். அதைக் கையில் எடுத்தேன். மணம் 'கம கம' வென்று வீசியது. எனக்கு ஆச் சர்யமாய்ப் போய்விட்டது. பிரித்தேன். ரோஜா இதழ்கள் வாடிவதங்கிப் போய் பட மொன்றை மறைத்துக் கொண்டிருந்தது! என் 'போட்டோவை' என்னைக் காணமல் எடுத்து வைத்துக் கொண்டு பார்த்து மகிழ்ந்து வந்தார் என்றே எண்ணினேன். பெருமிதத்துடன் மலரை விலக்க இருந்தது நானல்ல! பின், அம்புஜம்—அவருடைய தற்போதிய மனைவியும் அல்ல! பின் யாராக இருக்கலாம்? ஒன்று கல்யாணமாகி சிறு வயதில் பறி கொடுத்த அன்பு மனைவி யாகவோ, அல்லது, காதலியாகவோ இருக்க வேண்டும் என்று எண்ணினேன். "காதலி" என்று எண்ணி இறுமாந்தது என் மனம்.

அவர் பொருள்களை ஒப்பிக்கும் போது, போட்டோவை, புத்தகத்துடன் கொடுத் தனுப்பி விட்டேன்! எனக்கு ஏனோ அனு தாபம் அவர்மேல்? இருப்பினும், வந்த கோபத்தில், அம்புஜத்திற்கு நான் 'போட்டோ'வைக் கண்டு எண்ணியதை எல்லாம் வரைந்து அவள் மனதைக் குட்டை யாக்க முற்பட்டேன்!

அம்புஜத்தின் பதில் என்னை உட்கார வைத்துவிட்டது. என் அவசர புத்தியை எண்ணி வருந்தினேன்! அவமானம் என்னை அணைத்தது! அப் புத்தகத்தை அவள் பார்க்க வில்லை யாயினும், அவள் அவர் மேல் கொண்டுள்ள அன்பு அவளை அவர்மேல் சந்தேகமே கொள்ளச் சொல்லுவதாம்! அவர் நன்னடத்தையில் அவளுக்கு நம்பிக்கை யுண்டாம்! அவர் அவள் மேல் கொண்டுள்ள அன்பும் என்றும் மாறுதிருக் கக் கூடியதாம்! பாபம்! அம்புஜம் உலகறியாப் பேதை! சேற்றில் காலை விட்டுக்கொண்டு மேலேறலாம் என்ற நம்பிக்கையை இன்னும் ஏனோ அவள் விட வில்லை! இறுமாப்பும் வேறு! தண்ணீரில் அமிழ்ந்தவன் தர்ப்பையைக் கொண்டுக் கரையேற முயற்சிப்பது போல்! "என்னை எப்படி எல்லாம் போற்றிப் புகழ்கிறார்,

ஞானசௌந்தரியில்
T. R. மஹாலிங்கம்
M. V. ராஜம்மா

விஸ்வாமித்ராவில் T. R. ராஜகுமாரி

தெரியுமா? நானே அவருக்கெல்லாமாம்! எனக் கிஷ்டமில்லாவிடின், அவர் தாயைக் கூட அழைத்துக்கொள்வ தில்லையாம்!" என்ற வெட்கத்தை விட்டு, வெள்ளை மனத் துடன் எழுதி யிருந்த அவளைக் கண்டு அனுதாபமே கொண்டேன்.

பாழும், பம்பாயில், எத்தனையோ ஆஸ்பத்திரிகள் இருக்க ஏன், அந்த ஆஸ்பத்திரிக்கே, என்னை அழைத்துச் செல்லக் கேட்டுக்கொண்டாரோ என் கணவர்! நாங்கள் பம்பாய்க்கு வந்தபோது, அவர்களை நம்பி ஏனோ வரவில்லை. திடீரென்று என் கணவருக்கு "பார்ஸவ வாயு" வந்து பிடித்துக் கொள்ளவே பயந்தே விட்டேன். தகப்பனுக்குக் கடிதமெழுதக் கூடாதென்று தடுத்துவிட்டார் அவர். பதிலுக்கு அவரை நான் அங்கே—அந்த ஆஸ்பத்திரிக்கே—அழைத்துச் செல்லவேண்டுமாம்! என் சிநேகிதி அம்புஜம் அங்கே யிருப்பதால் எனக்காக அவரை நன்கு கவனித்துக் கொள்வாளாம்!

அம்புஜத்தை அவர் எனக்காகவேனும், புகழ்ந்ததை என்னால் கேட்கக் கூடவில்லை. அவள் மேல் எனக்கு வெறுப்பே அதிகரித்தது. நான் அவரை அழைத்துச்சென்றேன். அம்புஜம் என்னைக் கண்டு சந்தோஷமே கொண்டு ஆசார உபசாரங்கள் செய்தாள். அவள் கணவனை நான் முதல் இரண்டு நாட்கள் காணவில்லை! நான் காண விரும்பவும் இல்லை. நான் போனபின், வந்துவிட்டுப் போவாராம்! இதிலிருந்து தெரியவில்லையா, அவர் என்னுடன் முகம் கொடுத்துப் பேசப் பயப்படுகிறார் என்று?

மூன்றாம்நாள் அம்புஜத்தை வேண்டுமென்றே இழுத்து வைத்துக்கொண்டு, அவள் கணவரின் நடத்தையைப்பற்றி கேட்டேன். அவள் பழைய பதிலையே திரும்பச் சொன்னாள். நான் வாயடைத்துப் போனாலும், இருக்க விரும்பவில்லை. "ஏண்டி, அம்புஜம், தங்கக்கம்பி யென்றால் கண்ணைக் குத்தினாலும் பொறுக்கமுடியுமா?" என்று கேட்டேன். "இல்லேடி, தங்க கம்பியை நெருப்பில் காட்டினால் தானே?" என்றாள். இதன் அர்த்தத்தை நான் புரிந்து கொள்ள வில்லை. இருந்தாலும் நான் மேலே பேச இஷ்டப்படவில்லை.

அடுத்தநாள், அவர், வராந்தாவில் என்னைச் சந்தித்தார். இல்லை—சந்திக்க நேர்ந்தது என்று நினைக்கிறேன். என்னைக்கண்டு பயப் படவோ, நடுங்கிக் குன்னிப்போகவோ யில்லை. சாதாரணமாகவே, "சௌக்யமா?"

எம், ஆர். சுவாமிநாதன் "சகுனி மாமாவாக" வத்ஸலா கல்யாணத்தில்

என்றார். "ஆஹா!" என்றேன் எகத்தாள மனப்பான்மையுடன், "அவர் கணவர் தானே?" என்பது அடுத்த கேள்வி. என்ன அயோக்யத்தனம், குறும்புத்தனம் என்று எண்ணிக்கொண்டேன் "ஏன், வேறு யாரென்று எண்ணினீர்கள்?" என்று கேட்டுச் சூடு கொடுப்பதாக எண்ணிக் கொண்டேன். "இல்லை, என் மாப்பிள்ளை!" என்று நினைத்தேன்!" என்று அவர் சொன்னது என்னைத் தூக்கி வாரிப்போட்டது. "மாப்பிள்ளையா?" என்று வாயைப்பிளந்தேன். "ஆம், என் சகோதரி நீ—உன்னை மணந்த அவர்—என் மாப்பிள்ளைதானே?" என்றார். எனக்கு வந்த ஆத்திரத்தில் அவரை, அப்படியே பிழிந்திருப்பேன். அம்புஜம் அதற்குள் வந்துவிட்டாள். "என்ன, என் மேல் சந்தேகமோ!" என்று அவளைப் பார்த்து அவர் கேட்டார். எனக்கு என்னவோ சுரீரென்றது. அம்புஜம் சிரித்தாள். அதன் அர்த்தம்? சாகஸக்காரி, அவளா தெரிவிப்பாள்? நான் புறப்பட்டு வந்து விட்டேன்.

மறுபடியும் அவரை நான் சந்திக்கவில்லை. சகோதரியாம், சகோதரி! அன்று நடத்திய நாடகம் தோற்றபின் சகோதரி உறவு கொண்டாடுகிறாரே இவர்? டாக்டர்கள் கல்நெஞ்சர்கள்தான்! கல்லிலும் விஷம் கலந்த நெஞ்சு இவருக்கு, என்று எண்ணிக் கொண்டேன்.

"என் வைரமும் கல்போல்தானே? விஷம் போல் உயிரையும் வாங்கிவிடுமே?" என்ற நினைப்பு எனக்கு அப்போது உதிக்கவில்லை.

என்கணவர் பிழைத்தெழுந்ததும், ஒருநாள் அவரிடம், ராகவனிடமிருந்து, (அம்புஜத்தின் கணவன்தான்!) அப்புத்தகத்தை வாங்கி வரக் கேட்டுக்கொண்டேன். அடுத்தநாள் எங்கோ சென்றவர் அதை அப்படியே எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். நான் ஊரிலிருந்து அப்போது, அனுப்பியபோது, போட்டிருந்த கட்டை அவர் அவிழ்க்கவில்லை போலிருக்கிறது.

வெளியிலிருந்த பெயரைக் கண்டு அதைப் பிரிக்காமலேயே எடுத்து வந்திருந்தார். கட்டைப் பிரித்தேன். ரோஜா மணம் மறுபடியும் மூக்கைத் துளைத்தது. அப் பக்கத்தைப் பிரித்து அவரிடம் காட்டினேன். பின் நான் விவரிக்கலாம் என்பது என் எண்ணம். ஆனால் அடுத்த நிமிடம் நேரப்போனதை நான் அறியவில்லை. என் கணவர் முகம் சுருங்கி விரிந்தது. முகம் கறுத்தது. கண்களில் நீர் மல்கியது! கண்களைத் துடைத்துக் கொண்டு என்னைப் பார்த்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் அழுதேவிட்டார்! புத்தகத்தை பொத்தென்று கீழே போட்டார். போட்டோ தெறித்து வெளியே தலை குப்புற விழுந்தது. நான் உற்றுக் கவனித்தேன். அதன் மேல் என்னவோ எழுதியிருந்தது.

“அன்புள்ள சகோதரி! உன் ஸ்தானத்தில், நான் நேசித்த அவளை என் சகோதரியாக ஏற்றுக்கொண்டபின், அவனுக்குச் சமர்ப்பித்து விட்டேன்! இதனால் உன்னை இழந்தாலும், உன்போலுள்ள கமலாவின் மூலம் நீ வாழ்ந்து வருகிறாய்!”

என் தலை சுற்றிற்று. அசந்தே போனேன்! எப்போது விழித்துக் கொண்டேனோ; என்னெதிரில், ராகவனும், அம்புஜமும் இருப்பதைக் கண்டேன். என் களைப்புத்தீர எனக்காகப் பானமெதையோ வைத்துக் கொண்டு காத்திருந்தாள் என் மன்னி—அம்புஜம்!

“கண்ணே கமலம்!” என்றார் என் கணவன்! “அண்ணா!” என்று ராகவனின் காலில் நான் விழுந்தேன். என்னை அவர், ‘தீர்க்காயுசாக இரு!’ என்று ஆசிர்வதித்தார்.

என் கணவர் சொன்னார்: “கமலம், ராகவனின் விருப்பப்படி உன்னை மணக்கும் முன், முதல் தாரத்தை நான் பறி கொடுத்தவன், என்பதை உன்னிடம் அறிவிக்காமலிருக்க ஒப்புக்கொண்டே உன்னை மணந்தேன். அது இப்போது எப்படியோ வெளியாய் விட்டது! எல்லாம் நன்மைக்கே!”

அன்றே அண்ணாவும் நானும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம்! என் கணவரும், அம்புஜமும் அதற்குச் சம்மதித்தனர்.

அதன்படி, எட்டு வருஷத்திற்குப்பின், அவர்கள்:

“டேய், ரெகு! வாடா, அப்பா அம்மா விளையாட்டு விளையாடலாமாடா? நான்தான் அம்மாவாம்! நீ அப்பாவாம்!” என்று கமலி அழைக்க, “போடீ!” என்று ‘பிகு’ செய்து கொண்ட ரகுவைக் கண்டதும், பிற்காலத்தில் தம்பதிகளாகத் திகழ வேண்டியவர்களைக் கண்டு நானும், அண்ணாவும், பூரித்துப் போனோம்!

மதனமாலா புகழ் ஸ்ரீமதி ரஜினி சாதாரண வாழ்க்கையில்

செய்திப் படங்கள்

"பல்குநன்"

"ஆங்கிலப் படங்களுக்கு இந்தியா ஒரு நல்ல மார்க்கெட்டு," என்று சமீபத்தில் இந்த நாட்டுக்கு வந்திருந்த அமெரிக்க சினிமாக் காரர் ஒருவர் சொல்லியிருக்கிறார். நமக்கு உடனே ஆங்கிலப் படங்களுக்கு மட்டுமா, அயல் நாட்டிலிருந்து வரும் எல்லாவற்றிற்கும் இது ஒரு பெரிய மார்க்கெட்டுதானே? என்று அங்கலாய்த்துக் கொள்ளத் தோன்று கிறது.

ஆனால் சினிமா விஷயத்தில் நாம் அங்கலாய்த்துக் கொள்வதைவிட வருத்தப் படுவது தான் இப்போதைய நடைமுறை நிலைமை.

நான் ஹாலிவுட்டிலிருந்து வெளியாகும் படங்களின் தாராதரத்தைப்பற்றி எதுவும் சொல்லப் போவதில்லை. ஆனால் நம்மூர் சரக்குக்கு நம்மூரிலேயே மதிப்பில்லையே என்று சொல்லுவேனே என்றும் நினைக்க வேண்டாம்.

நல்ல படங்கள் நம்மூரில் தயாராகவில்லையே என்றும் நான் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் இத்தகைய விவரங்களை ஏற்கனவே பலர் சொல்லி விட்டார்கள்.

ஆங்கில சினிமாப் படங்களை ஆங்கிலத்தில் சொற்ப அறிவே பெற்றவர்களும் போய்ப் பார்க்கிறார்கள் என்றுதான் நான் சொல்லப் போகிறேன்! உடனே சில சண்டைக் காட்சி நிறைந்த படங்கள், காமக் களியாட்டங்கள் உள்ள படங்களை போய்ப் பார்ப்பதையே நான் பெரிதாகக் குறிப்பிடுவதாக எண்ணி விட வேண்டாம். அயல் நாட்டுப் படங்களில் 'அலாதியான விஷயம்' அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் ஆங்கில மொழியில் அற்ப பரிச்சயமும் உள்ளவர்களை ஆகர்ஷிக்கும் விஷயம் எது தெரியுமா?

விளம்பரத்திலே வரும் மூலப் படங்கள் அல்ல. முன்னே வரும் 'செய்திப் படங்கள்' தான். பிரபல ஆங்கிலப் படக் கம்பெனிகளான, யுனிவர்ஸல், பாரமௌண்டு, கௌமாண்டு பிரிட்டிஷ் நியூஸ் டைம், முதலியவர்கள் செய்திப் படங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனக் கென்னமோ அவர்களுடைய நூதன படங்களைவிட இத்தகைய செய்திப் படங்களைத் தயாரிப்பதில் அதிக வெற்றி பெற்றிருப்பதாகத் தோன்று கிறது.

உலக நிகழ்ச்சிகளை—பல்வேறு கோணங்களில் உலகில் நடக்கும் சம்பவங்களைக் கோர்வையாகத் தொகுத்து அவர்கள் காட்டுவதில் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை, அவைகளுக் கிருக்கும் மதிப்பில் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.

சர்வசாதாரண மனிதனுக்கு—ஆங்கிலத்திலே 'ஆவரேஜ் மானுக்கு' (சராசரி மனிதான்) இப்பொழுது 'உலகைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமும், ஆசையும் ஏற்பட்டிருக்கிறது. எங்கு என்ன நடக்கிறது? என்று எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளத் துடிக்கும் 'பசி' இப்போது சகலருக்கும் ஏற்பட்டிருப்பது ஒரு நல்ல சகுனமே. ஆனால் தெரிந்து கொள்ளத் துடிக்கும் உணர்ச்சி வேகத்தில் 'நல்லது கெட்டது' பற்றிய பகுத்தறிவும் சக்தி குறைந்து விடக்கூடாது. ஆங்கில செய்திப் படங்கள் இத்தகைய 'பசியை' ஒரு வகையில் ஆற்றுகிறது என்றே நான் நினைக்கிறேன்.

ஹவாய் டான்ஸ்களும், ஜோ லூயிஸ் குத்துச் சண்டைகளும், ஆஸ்திரேலியா கிரிக்கெட் ஆட்டமும், அரசகுமாரியின் திருமண விழாவும் செய்திப் படங்கள் மூலம் வரும் பொழுது அவை எப்படி நம் மனதைக்கவராமல் இருக்க முடியும்? 'மொழி' புரியவில்லையே என்ற குறை செய்திப் படங்களைப் பார்க்கும்போது அவ்வளவாகத் தோன்றவில்லை. ஜனங்களுக்கு இப்போதெல்லாம் பொது விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலைத்தவிர அயல்நாட்டுப் படங்களிடம் அலாதியாக பேரபிமானம் எதுவும் ஏற்பட்டு விட்டதாக எண்ணிவிட வேண்டாம்.

நம் நாட்டு இயற்கை, செயற்கைக் காட்சிகளையும், குறிப்பிடத்தக்க விஷயங்களையும் சம்பவங்களையும், சீரான முறையில் தயாரித்து வெளியிட படக்காரர்கள் விரும்பாத காரணம் புலப்படவில்லை.

செய்திப் படங்களை தாயாரிப்பதில் தொழிலில் லாபம் இல்லை என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

இந்தக்காரணம் நியாயமானதேயல்ல. ஒரு ஆங்கில செய்திப்படத்தில் ஏதோ ஒரு நீர்

"கங்கணம்" தமிழ்ப் படத்தில்
ஸ்ரீநிவாஸனும் கல்யாணமும்

வீழ்ச்சியைப் படம் பிடித்திருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது அப்படி ஒன்றும் பிரமாதமான நீர்வீழ்ச்சியல்ல. ஆனால் 'டெக்னிகல்' உபகரணங்களால் அக்காட்சி கவர்ச்சியாயிருந்தது. என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் நம்மூரில் இதைவிட எவ்வளவோ பெரிய நீர்வீழ்ச்சி இருக்கிறது. அதைப் படம் பிடிக்க ஒருவரும் முன்வரவில்லை. 'இவர்களுக்கு' ஏன் இதைப் பற்றியெல்லாம் கவனம் உண்டாகப்போகிறது? புராண காலத்திய கதை ஒன்றுக்கு கங்கை வீழ்வதாக் கற்பனை பண்ணி 'குழாயை'த் தேடுவார்கள், என்று பேசிக்கொண்டனர்.

அடுத்தாற்போல பெண்களின் நீச்சுப் பள்ளிக்கூடம் ஒன்றைப் படமெடுத்திருந்தார்கள். அதை ஏதோ தேவலோகக் காட்சியைப் போல ரஸித்தார்கள். நம்மூரில் ஆறு குளங்கள் இல்லையா! நீந்தக் கூடியவர்கள் இல்லையா? அதிவேகமாக ஓடும் காவேரி ஆற்றில் எதிர் நீச்சு போடக் கூடியவர்கள் ஆயிரக் கணக்கானவர் இல்லையா? என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

அடுத்தாற்போல் ஒரு புராதன மாதா கோயில் ஒன்றைக் காட்டினர். அறுநூறு வருஷங்களுக்கு முந்தி கட்டப்பட்ட கோயில் என்று அக்காட்சிக்குத் தலைப்புக் கொடுத்திருந்தனர். உடனே என் பக்கத்திலிருந்தவரில் ஒருவர் அழாக்குறையாக எப்போது யாரால் கட்டப்பட்டது என்று நிர்ணயிக்க முடியாத மகத்தான கோயில்கள் கொண்ட இந் நாட்டின் புராதனப் பெருமையைப் பற்றி ஒருவர் (இங்கே ஒருவர் என்பது படக்காரரைக் குறிப்பதாகும்) கூட கவனம் செலுத்தவில்லையே! எத்தனை பெரிய கலைக் கோபுரங்கள், கோட்டைகள் இந்த நாட்டிலே பரவிக்கிடக்கின்றன. மனித யத்தனத்திலே நிர்மாணிக்க முடியுமா என்று பிரமிக்கக் கூடிய இவைகளை உலகம் கண்டு பிரமிக்கும்படி இந்தப் படங்கள் மூலம் செய்ய முடியாதா? என்று அந்த நண்பர் ஆவேசத்துடன் கேட்டதும் பலர் அவர் சொல்லை ஆமோதித்ததைக் கண்டேன்.

நல்ல படங்களை, குறிப்பாக செய்திப் படங்களைத் தயாரிக்க முயன்று வந்தவர்கள் சிலர் போதிய ஆதரவற்று, லாபமின்றி முயற்சியைக் கைவிட நேர்ந்ததாக ஒரு பட உலகப் பிரமுகர் என்னிடம் கூறினார்.

ஓரளவு இதில் உண்மையிருந்தாலும் முயற்சிக்கு முடிவு கட்டும்படியான அளவுக்கு ஆதரவில்லாமல் போகாது. ஜனங்களுக்கு, நல்ல படங்கள் வரவில்லை, வேறு வழியில்லை, எந்தப் படம் வந்தாலும் ஒரு தரமாவது பார்த்து விடுவது என்ற எண்ணம் ஏற்பட்டு தற்போதுள்ள படங்களைப் பார்க்கின்றனர். நல்ல படங்கள், விஷயம் அறிய வேண்டும் பசியைத் தீர்க்கும் படங்களைத் தயாரிக்க முன் வருபவர்கள் நிச்சயம் பொது ஜனங்களின் ஆதரவைப் பெற முடியும்.

தனிப்பட்ட சிலர் மட்டும் செய்திப்படங்கள் தயாரிப்பதில் வெற்றியோ லாபமோ பெற முடியாது என்ற ஒரு அபிப்பிராயமும் நிலவுகிறது. சர்க்காரின் ஆதரவு வேண்டும் என்பதும் ஓரளவுக்கு உண்மைதான். இதற்கு யுத்த காலச் செய்திப் படங்களை சர்க்காரே மேற்கொண்டது உதாரணமாகும்.

எனவே இப்போதைய நிலைமையில் ஜன சமூகத்தின் கருத்துக்கு, இசைந்த வகையில், வாழ்க்கைக் குகந்த ரீதியில், செய்திப் படங்கள் தயாரிக்கப் படவேண்டும். செய்திப் படங்கள் மூலம் பொது ஜனங்களிடையே பல்வேறு முறையிலும் விழிப்பும், மாறுதலும் உண்டாக்க முடியும். சுதந்திர இந்திய சர்க்காரும், பட உலகப் பிரமுகர்களும் உடனடியாக இந்த வேலையில் ஈடுபடுவார்களேயானால் படத் தொழிலும் முன்னேறும். ஜனங்களுக்கும் அயல் நாட்டுப் படங்களில் மோகம் குறைந்து நம்மூர்ப் படங்களுக்கு ஆதரவு காட்டும் உணர்ச்சி உண்டாகும்.

லிட்டடல் பில்ம் கார்ப்பரேஷன் லிட்.
தயாரிக்கும்

ஞானசௌந்தரி



நாடக மேடையில் ஏற்கனவே கீர்த்தி பெற்ற இந்தக் கதையை திரைக்குக் கொண்டுவர ஸ்ரீ நாகூரும் ஸ்ரீ ஜோஸப் தளியத்தும் அரும்பாடு படுகின்றனர். சினிமாத் தொழிலில் நாகூரின் அகன்ற அனுபவமும், ஆற்றலும் இப்படத்தின் அமோகமான வெற்றியை முன் அறிவிப்பவைகளேயாகும்.



இதன் காக்ஷி ஜோடனைகளும் ஆடை அலங்காரங்களும் மகத்தானவைகளாய் அமைந்திருக்கின்றன. இத்துடன் எம். வி. ராஜம்மாளின் நடிப்பும் டி. ஆர். மஹாலிங்கத்தின் பாட்டுக்களும் படத்துக்குத் தனி பெருகு தருகின்றனவாம்.

நியூடோன் ஸ்டுடியோவில் வளர்ந்து வரும் இந்த ஞானசௌந்தரி இன்னும் இரண்டே மாசங்களில் நம்மைச் சந்திப்பாள்.

ஸ்ரீ உதயசங்கர்

மேல் நாட்டு நடனக் கலையையும் நம் நாட்டு நடனக் கலையையும் ஆராய்ந்து அவற்றின் அருமை பெருமைகளை நன்குணர்ந்தவர். நம் நாட்டுக் கலைகள் உலகில் மிகப் பழமையானவை, சிறந்தவை என்னும் உண்மையை உலகம் அறியும்படி செய்து பல தேசங்களிலுள்ள கலை அபிமானிகளின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

இப்போது "கல்ப்பனா" என்னும் முழுநீள நாட்டிய ஹிந்திப்படத்தைத் தயாரித்திருக்கிறார். இப்படம் திரைக்கு வந்ததும் உதய சங்கருடைய அகில உலகப் புகழ் அமரத்துவம் அடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✻

நாட்டியம்

தொன்று தொட்டே நம் நாட்டில் நாட்டியக் கலை மிகவும் பிரதான ஸ்தானம் பெற்று வந்திருக்கிறது. சில அரிய சிற்பங்களும் சித்திரங்களும் நாட்டியத்தின் அருட்சியால் உண்டாயிருக்கின்றன. வாழ்க்கையின் கிரமங்களையும் ஒழுங்குகளையும் சித்தரிக்கும் இக்கலைக்கு அருட்சியளிப்பது இயற்கை அன்னை.

நாட்டியக் கலையை நன்ருய் அனுபவித்து ரஸித்து நன்கு மதித்ததினுல்தான் அரசர்கள் அதற்குப் பேராதரவு அளித்து ஆதரித்து வந்திருக்கிருர்கள். இதற்கு இத்தனை உன்னத ஸ்தானம் அளிப்பது ஏன்? ஜகம் அனைத்தும் ஓய்வின்றி வாழ்க்கையில் சுழன்று வருவதில் பாரத நாட்டு மக்கள் அலாதியான ஓர் நடனத்தை அனுபவிக்கிருர்கள். இந்த நடனம் தான், பக்த கோடிகளின் லௌகீக விலங்குகளைத் தகர்த்து எறிந்து என்றும் அழியா அநுக்கிரக மாரியை அவர்கள் மேல் பொழியும் ஈஸ்வரன் உலகத்தின் உள்ளத்தில் ஆடும் நடனம்.

நாட்டியக் கலையின் மதிப்பை விளங்கப் பண்ணுவதற்கு சரீர ஆரோக்கியப் பயிற்சியும், நாட்டியத்தைப் பற்றிய அறிவும் மட்டுமல்ல புத்தி கூர்மையும், அத்ம விருத்தியும், சங்கீதப் பயிற்சியும், இலக்கியத் தேர்ச்சியும் இன்றியமையாதவை. நமது இலக்கியங்கள், நாட்டியக்கலையுடன் இணைக்கப்பட்டிருக்கும் அறுபத்துநான்கு கலைகளையும் பயின்ருல் மட்டுமே நாட்டியக் கலை சிறப்படையும் என்று அறைகின்றனர். ஆகையால் போதிய அறிவும் பண்பாடும் இல்லாமல் நாட்டியம் கற்றுப் பயன் இல்லை.

இப் பிரமாணங்களின்படி நாட்டியப் பயிற்சி செய்து வந்தால், உலகில் மிகப் பழமையான இக் கலை மானிட வாழ்க்கைக்கு வழி காட்டுவதாய் மட்டுமல்ல, வாழ்க்கையிலுள்ள அத்தனை அம்சங்களும் ஐக்கியப்படைய அடிகோலும் புனித சேவையுமாகும்.

✲

அடுத்த பக்கங்களில்......

ராகம்: ஸஹானு தாளம்: ஆதி

பல்லவி.

யாரோ, இவருக் கெந்த ஊரோ—ஏனிங்கு
வந்தாரோ—அழைத்தால், வருவாரோ
வடிவழகன்—யாரோ.

அ. ப.

பாரோர் புகழ் நாரணனுரோ அவரின்
மைந்தனுரோ—ஆதி சிவனுரோ அறிகிலேன்
(யாரோ)

ச ம்.

மங்கையர் உலகத்தை வங்கை தீர்த்துக்
கொள்ள—பங்கையன் இவரை
படைத்தனுப்பினர் போலும்
தங்கை எனது மன சங்கை விட்டிவர்க்கிந்த
பங்கை யளித்திடுவேன்
தங்கையே கேளடி. (யாரோ)

இன்றைய தென்னட்டு நாட்டிய ரத்தினங்களில் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் பிரேமாவதி, தற்போது புகழ் ஏணியில் ஏறிவரும் பிரபல சினிமா நக்ஷத்திரமாகவும் இருக்கிருர்.

திருச்சூர் ஸ்ரீமதி பிரேமாவதி இந்த சிறந்த பாட்டுக்கு அதி உன்னதமாக அபிநயம் பிடிப்பதை அடுத்து வரும் பக்கங்களில் காணலாம்.

தம்முடைய பூரண திறமையையும் அனுபவத்தையும், முகபாவ லட்சணங்களையும் காட்டி அவர் அபிநயம் பிடிப்பது எவ்வளவு சிறப்பா யிருக்கிறது!

✲

யாரோ இவருக்கெந்த ஊரோ
தங்கையே கேளடி
பாரோர் புகழ்
படைத்தனுப்பினர்
போலும்
நாரணனரோ
Jasee

எனது
மன சங்கை
வருவாரோ
நங்கையர் உலகத்தை
வங்கம் தீர்த்து
பங்கயன்
அவனின்
மைந்தனோ
ஆதி சிவனோ



ஸ்ரீமதி, ஜயஸ்ரீ

மேனகா

அழகுக்கு அழகு செய்தல்

பி. ஸி. ஸி. பி.



அழகு படுத்துவது அல்லது "மேக்-அப்" படத் தொழிலில் முக்கியமானது. எனினும் படத் தொழிலுக்கு என்று புதிதாய் ஏற்பட்டதல்ல. தொன்று தொட்டே நம்மவர்கள் தங்களை அழகு படுத்துவதைக் கையாண்டுவந்திருக்கிறார்கள். நமது பெண்கள் மஞ்சள் பூசி நீராடுவதும், கண்களுக்கு மை தீட்டுவதும், நகங்களில் வர்ணமிடுவதும் மிகப் பழமையான வழக்கம். அநாகரீகமான மலை வாசிகளும் தங்கள் முகங்களில் வர்ணங்கள் பூசியிருப்பதைப் படங்களில் பார்த்திருக்கிறோம்.

இன்று நாகரீகமான முறையில் தங்களை அழகு படுத்துவது சர்வ சாதாரணமாயிருக்கிறது. "ஸ்நோ" "பவுடர்" "லிப்ஸ்டிக்" முதலியவைகளும் வாழ்க்கையில் பிரதானமானவைகளாய் ஆகிவிட்டன.

அழகு படுத்தும் இந்த வேலை இன்று ஸினிமா உலகில் முக்கியமான ஒரு கலையாக விளங்குகிறது. இக் கலையின் பணியால்தான் நாம் திரையில் காணும் நடிகர்கள் அவ்வளவு அழகுடனும் சோபையுடனும் நம்மை மகிழ்விக்கிறார்கள்.

ஸினிமா "மேக் அப்" சாதாரணமாய் வாழ்க்கையில் அன்றாடம் உபயோகிக்கும் "மேக் அப்" பிலிருந்து வித்தியாசமானது என்பதை ரஸிகர்களுக்கு விளக்குவதே என் நோக்கம். நான் சொல்லப்புகும் விஷயங்கள் ஸினிமாத் தொழிலில் உள்ளவர்களுக்குப் பழைய பாடம்.

கதாநாயகி, கதாநாயகன், முதலிய பாத்திரங்களைத் தாங்கிநடிக்கும் நக்ஷத்திரங்கள் இயற்கையில் எழிலுள்ளவர்களாய்த்தானே இருக்கிறார்கள். அவர்களும் தங்களை அழகு செய்ய வேண்டுமா? எவ்வளவு அழகுள்ளவர்களும் ஸ்நானம் செய்து தங்களை அலங்கரித்துக் கொண்டு ஒரு சில நிமிஷங்கள் மட்டும் வெய்யிலில் நடக்கட்டும். சூரிய வெப்பத்தினால் அவர்களுடைய இயற்கை எழில் சற்று குன்றிப் போகிறது. சோபை மறைந்து விடுகிறது. ஸினிமாப் படம் பிடிக்கையில் அதிகப் பிரகாசமுள்ள மின்ஸார விளக்குகளுக்குக் கீழ் இருக்க வேண்டிய அவசியமுண்டு. இதனால் எத்தனை அழகுள்ளவர்களாயினும் அவர்களுடைய அழகு குறைந்தே படத்தில் தெரிகிறது. தங்களை அழகு படுத்தும்படி சாதாரணமாய் அன்றாடம் உபயோகிக்கும் "ஸ்நோ" "பவுடர்" "லிப்ஸ்டிக்" முதலியவைகளால் தங்களை அழகு படுத்திக் கொண்டாலோ, படம் பிடிக்கப்படுகையில் நடிகர்களின் தோற்றங்கள் இயற்கைக்கு மாறாயும், சில வேளையில் விகாரமாயும் மாறி விடுகிறது.

ஆகையால் நடிகர்கள் பூரண எழிலுடன் திரையில் தோன்றி ரஸிகர்களின் கண்களையும் கருத்துக்களையும் ஒருங்கே கவர வேண்டுமானால், பிரத்தியேகமான முறையில், சினிமா நடிகர்கள் தங்களை அழகு படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்துடன் வெகு நேரம் பிரகாசமுள்ள வெளிச்சத்தின் கீழிருந்து நடிப்பதாலும், நடிப்பதிலுள்ள சிரமத்தினாலும் நடிகர்கள் களைப்படைவது இயற்கையே. இக் களைப்பால் அவர்களுடைய முகத்தில் சோர்வு மேலிடுகிறது. இதனால் அவர்கள் தாங்கி நடிக்கும் பாத்திரங்களின் மெருகு குறையும். முகத்தில் சோர்வைக் காட்டாதிருக்கும்படியான ஒரு அழகு

ஸ்டார் கம்பைன்ஸ் "சம்சாரநௌகா" வில் பந்துலுவும் பிரேமாவதியும்.

படுத்தும் முறை தேவையாயிற்று. தேர்ந்த ஒரு முறையைக் கண்டு பிடித்தவர் மாக்ஸ் பாக்ட்டர் என்னும் அமெரிக்கர். ஹாலிவுட்டிலுள்ள வார்னர் பிரதர்ஸ் ஸ்டுடியோவில் சுமார் இருபது ஆண்டுகள் சலிப்பின்றி ஆராய்ச்சியும் ஆய்வுகளும் செய்து, இன்று நக்ஷத்திரங்கள் உபயோகிக்கும் "மேக் அப்" முறையையும் அதற்கு வேண்டிய சாதனங்களையும் கண்டுபிடித்தார். ஸினிமாத் தொழில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ; அவ்வளவு முன்னேற்றம் "மேக் அப்" சம்மந்தமாய் மாக்ஸ் பாக்ட்டர் அடைந்தார். இன்று "மேக் அப்" பூரணத்துவம் அடைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

அழகு படுத்தும் இக் கலையின் இரகசியம் நிறப் பொருத்தமுள்ள அலங்கிருதப் பூச்சுக்களை உபயோகிப்பதுதான். ஒவ்வொரு நடிகர்களின் நிறத்துக்கும் முடியின் நிறத்துக்கும் கண் நிறத்துக்கும் பொருத்தமான அலங்கிருதப் பூச்சுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த மாதிரியான முறையில் அழகு படுத்துவதினால் நடிகர்கள் இயற்கை எழிலுடனும் கண்ணைக் கவரும் அழகுடனும் ரஸிககோடிகளை மகிழ்விக்கிறார்கள்.

முகத்தில் அங்கப் பழுதுகள் இருப்பின் அவற்றை மறைக்கவோ குறைக்கவோ செய்யலாம். இல்லாவிடில் படத்தில் அவைகள் பெரிதாக்கப் பட்டுவிடும். நடிகர்கள் தாங்கி நடிக்கும் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் தகுந்த முக வெட்டை உண்டாக்கலாம். உருண்டையான கன்னத்தை குளிந்ததாயும், உருண்டை முகத்தை நீண்டதாயும், நீண்ட முகத்தை நீளம் குறைந்ததாயும் செய்யலாம். கண்களையும் கண் புருவங்களையும் அழகு படுத்தும் முறையால் முகத் தோற்றத்தை வாலிப முறுக்குள்ளதாயோ, வயோதிப சாயலுள்ளதாயோ, மூடனாயோ அல்லது நீசனாயோ மாற்றலாம். "மேக் அப்" கலையைக் கொண்டு செய்யக்கூடிய அற்புதங்களில் இவைகள் ஒரு சில மாத்திரமே. சாதாரணப் புகைப்படம் பிடிப்பதற்கும் இந்த "மேக் அப்" முறையை உபயோகிக்கலாம்.

நாடக மேடையில் நடிக்கும் நடிகர்கள் உபயோகிக்கும் "மேக் அப்" ஸினிமா "மேக் அப்" பின் பிரமாணங்களை மூலாதாரமாய்க் கொண்டதுதான். ஆனால் அலங்கிருதப் பூச்சுகளின் நிறம் நாடக மேடைக்கு உபயோகிப்பது, ஸினிமாவுக்கு உபயோகிப்பதிலிருந்து வித்தியாசமானது.

தென் இந்திய சினிமாத் தொழிலில் "மேக் அப்" புக்கு அதன் பிரதானமான ஸ்தானம் தரப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லத் துணியவில்லை. அதற்குப் பெரும்பாலும் காரணமாய் இருப்பது நடிகர்களே. மாலையில் நாலு மணிக்கு "மேக் அப்" ஆரம்பிப்பதற்கு நடிகர்கள் எல்லாம் வர வேண்டும் என்று "கால் ஷீட்டில்" குறிப்பிட்டு விளம்பரப்படுத்தி யிருந்தாலும் ஆறு மணிக்குப் பின் வருபவர்கள்தான் அதிகமான நடி



"சம்சாரநௌகா" வில் வேறு ஒரு காக்ஷி.
பந்துலுவும் பிரேமாவதியும்

கர்கள். ஏழு மணிக்கு "ஷூட்டிங்" ஆரம்பிப்பது எப்படி முடியும். "ஸெட்" டில் எவ்வளவு நேரம் காத்திருப்பார் டைரக்டர். உதவி டைரக்டர் "மேக் அப்" டிப்பார்ட்மென்டுக்கும் "ஸெட்டு" க்கும் ஏழு எட்டுத் தடவைகள் நடந்து "மேக் அப்" சீக்கிரம் ஆகட்டும் என்று துரிதப் படுத்தியும் பயன் இல்லை. ஏனென்றால் "மேக் அப்" ஆர்ட்டிஸ்ட் தன்னுடைய வேலையில் குற்றமில்லாமல் இருக்கும்படி சிரமப்படுகிறார். பொறுமையை இழந்த டைரக்டர் கடைசியாய் ஆத்திரத்துடன் சத்தம் போடவே, உதவி டைரக்டர் ஒரே ஓட்டமாய் ஓடி வந்து "சீக்கிரம் பவுடரைப் பூசி விடுங்கள். இன்று எடுப்பது எல்லாம் "லாங் ஷாட்" தான். "க்ளோஸப்பே" இல்லை. இருக்கட்டும் பரவாயில்லை. இவ்வளவு போதும். நேரமாகி விட்டது. ஏழு மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய ஷூட்டிங் இப்போ ஒன்பது மணியாகியும் ஆரம்பிக்கவில்லை. ஒரு மணி நேரம் "டிலே" ஆனால் ரூபாய் முன்னூறு நஷ்டப்." என்று பிரசங்கம் செய்கிறார். ஆத்திரத்துடன் போடப் பட்ட "மேக் அப்" புடன் ஷூட்டிங் நடக்கிறது. அன்று "லாங் ஷாட்" எடுத்த பின் நேரம் இருப்பதால் "க்ளோஸப்" கூட எடுத்து விடுகிறார்கள். இதன் விளைவுதான் திரையில் நடிகர்களின் முகம் இயற்கைத் தோற்றமில்லாமல், ஒரே வெள்ளை பூசின சுவர் போலவும், உதடுகளுக்கு வர்ணமிட்டிருப்பது, வாயில் ஏதோ காயம் பட்டு இரத்தம் வடிய எத்தனிப்பது போலவும் காக்ஷியளிப்பது.

இங்கிலீஷ் படங்களையும் தமிழ்ப் படங்களையும் பார்க்கும் ரஸிகர்கள் நமது "மேக் அப்" ஆர்ட்டிஸ்டுகளுக்கு வசைமாலைகளைச் சூட்டுகிறார்கள். இத்துடன் நடிகர்களும் டைரக்டர்களுங்கூட "அவனுக்கு என்ன "மேக் அப்" தெரியும். படத்தை அலங்கோலப் படுத்தி விட்டானே" என்று "மேக் அப்" செய்தவன் மேல் பெரும் பழி சுமத்துவதும் இயல்பு. ✲

பல படங்களில் நடித்து வரும் வி. செல்லம் கே. ஸ்ரீநிவாஸன்

தஞ்சாவூர் லெக்ஷ்மிகாந்தம்

குற்றம் எங்கே?

'ஆறு மாதம் கடுங்காவல்'......என்று தண்டனை விதித்தார் நீதிபதி.

"ஐயோ பாவம்...! சிறு வயதாச்சே...!"

"இவ்வளவு திடகாத்திரமான தேகம்வைத்துக் கொண்டு இவன் ஏன் திருடவேண்டும்...? கூலி வேலை செய்தாகிலும் வயிறு வளர்க்கலாமே...!"

"இந்த வயதிலே திருட்டு ... பெரியவன் ஆனால் என்னதான் செய்யமாட்டான்...?"

இப்படி எல்லாம் விமர்சனம் செய்தார்கள், தீர்ப்பைக் கேட்டவர்கள்...அந்தக் கூட்டத்திலே நின்ற பழுத்த திருடன் ஒருவன் சொன்னான், "பயித்தியக்காரன்...அற்பமான திருட்டு. அனுபவமில்லாமல் அகப்பட்டுக் கொண்டான்," என்று.

....

தண்டனைக்கும், விமர்சனங்களுக்கும், அனுதாபத்திற்கும் பாத்திரமானவன் ஒரு படித்த வாலிபன். எத்தனையோ இன்னல்களுக் கிடையே வாழ்வை வளர்த்தவன்... நாணயமாக நாட்களைப் போக்க நல்லெண்ணம் கொண்டிருந்தவன்......

அவன் மீதுதான் திருட்டுக் குற்றம்......

அவன் திருடியது உண்மை...தண்டனை, சட்டப்படி சரியானது...விமர்சனங்கள், அவரவர் போக்கின்படி நியாயமானவை......

ஆனால், தண்டித்த நீதிபதியும்...அபிப்பிராயங்கள் தெரிவித்த அத்தனைபேரும்...கூண்டிலே நின்ற குற்றவாளியைக் கண்டார்களே தவிர...அவன் செய்த குற்றத்தை அலசினார்களே தவிர...கைதிக் கூண்டிற்குப்பின் கண்ணுக்குத் தெரியாமல் நின்ற, அவனைக் குற்றவாளி ஆக்கிய, இன்னும் எத்தனையோ குற்றவாளிகளை அவர்கள் காணவில்லை...நினைக்கவில்லை...அவர்களைப் பற்றிப் பேசவுமில்லை.

திருடினான்—குற்றம். ஆனால் நாணயமாக வாழ விரும்பியவன் திருடினானே, ஏன்...? அதைப்பற்றி நினைப்பாரில்லை.

அவன் சோம்பேறி அல்ல...பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் நாடோடியல்ல...ஆனாலும்



ஏ. எஸ். ஏ. சாமி, பி. ஏ. (ஹானர்ஸ்)

திருடன்...! அவனுக்கு ஏன் அந்த நிலை ஏற்பட்டது...? அதைப் பற்றிக் கேட்பாரில்லை... படித்தவனுக்கு வேலை இல்லை...சமுதாய அமைப்பினால்; சில்லறை வேலைகள் கிடைத்தால், கால் வயிற்றுக் கஞ்சிக்கும் காணுவதில்லை வருமானம்...கள்ள மார்க்கட்டு விலைகளினால்; பத்து தினங்கள் பட்டினி...பசி பொறுக்கமாட்டாமல் திருடிவிட்டான் சிறிதளவு உணவை...இன்று கைதிக் கூண்டிலே அவன் நிற்கிறான் குற்றவாளியாக......

ஆனால் அவனைக் குற்றவாளி ஆக்கிய சூழ்நிலை...

அந்த சூழ்நிலைக்குக் காரணமாயுள்ளவர்கள்...

அவர்கள் செய்யும் கருணையற்ற செயல்கள்...

ஆகியவற்றைப் பற்றி சிந்திப்பார் யாருமில்லை...

* * *

ஆறுமாத சிறை வாசத்திற்குப் பின் சீராகி விடுவான் குற்றவாளி என்பது தண்டனையின் நோக்கம். சட்டம் அமைத்தவர்களின் அனுமானம்...

ஆனால் அவன் மனது மாறினால் மட்டும் போதுமா...?

அவனைக் குற்றவாளி ஆக்கிய நிலை மாற வேண்டாமா...? இந்தக் கேள்வியை எவருமே கேட்பதில்லை.

ஒரு விஷயத்தில் மட்டும் ஏகோபித்த அபிப்பிராயம்...அவன் குற்றவாளி...சந்தேகமே இல்லை...!

* * *

சட்டத்திற்குற்பட்ட குற்றவாளிக்குத் தான் தண்டனை விதிக்க முடியும் நீதியினால் ....ஆனால் குற்றவாளியைக் குற்றவாளி ஆக்கிய, சட்டத்தின் கண்களுக்குத் தெரியாத, குற்றவாளிகளைத் தண்டிப்பது யார்...?

சமுதாயத்தை, சமுதாய நிலைகளை அமைக்கும் அரசாங்கத்தை, அரசாங்கத்தை அமைக்கும் மக்களை ...... கண்டித்து, விமர்சனம் செய்து, சீர்திருத்த வேண்டிய பொறுப்பு... சமூக சேவையில் முக்கிய பங்கு பற்றும் பத்திரிகைகளைச் சார்ந்தது.........

"கண்ணாலே காண்பது பொய், காதாலே கேட்பது பொய், தீர விசாரிப்பதே மெய்..." என்ற முது மொழியை மறவாது......சுயநல எண்ணங்கள் எதுவுமின்றி, ஒரு சிலர் தயவிற்காக வேறு சிலரைத் தாக்கும் தன்மையின்றி, சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பொதுக் காரியங்களோடு பின்னிப் பிணைக்கும் அநியாயமின்றி, நேர்மையான தொண்டாற்றுவதே பத்திரிகைத் தர்மம் என்று பல பல ஆண்டுகளாக பாரில் வழங்கி வருகிறது நீதி.

அரசியல் பத்திரிகையில் வர வேண்டிய கட்டுரை, தவறி சினிமாப் பத்திரிகையில் வந்து விட்டதே என்று எண்ணுகிறீர்களா ......? இல்லை.

வெள்ளித் திரையிலே ஓடும் படம்—தீர்ப்பிற்காக நிற்பவனாக ... பணம் கொடுத்து அதைப் பார்க்கும் ரசிகர்கள் நீதிபதிகளாக ...பத்திரிகைகள் விமர்சகர்களாக வைத்து, திருட்டுக் குற்றம் சாற்றப்பட்டு நிற்பவனோடு நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால்.... சினிமாத் தொழிலின் சீர்திருத்தம் யார் கையில் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும்...

நல்ல படம் தயாரிக்க நினைக்கிறார், முதலாளி...முடிவதில்லை...ஏன்? அழகான கதை எழுத விரும்புகிறார், ஆசிரியர்...முடிவதில்லை ...ஏன்? உயர்தரமாக டைரக்ட் செய்ய எண்ணுகிறார், டைரக்டர்... முடிவதில்லை ...ஏன்? அற்புதமாக நடிக்க ஆவல் கொள்ளுகிறார் நடிகர்...முடிவதில்லை...ஏன்? நல்ல படந்தான் பார்ப்பேன் என்கிறார் ரசிகர்... அதுவும் முடிவதில்லை...ஏன்?

இப்படி, சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் கேட்கலாம்—எண்ணம் சிறந்ததாயிருக்க, விளைவு சீர்கெட்டிருக்கிறதே, ஏன்?

இது அவசியமான ஆராய்ச்சி ... தயவு தாக்ஷண்யமின்றி...தீர விசாரித்தறிய வேண்டிய உண்மை. இதிலே இருக்கிறது சீர்திருத்தம்......

பொறுப்புணர்ச்சி கொஞ்சமுமின்றி...நல்லெண்ணம் துளியுமின்றி, கலையிலே ஈடுபடுபவர்களைப் பற்றி அல்ல, நேர்மையான நோக்கத்துடன்...சிறந்த கொள்கைகளுடன் ...கலை வாழ்விலே ஈடுபட்டு, நினைத்தவை நடக்காமல், குற்றத்திற்கும், கவலைக்கும் கண்டிப்புக்கும் ஆளாகிவிடும் உண்மை உள்ளம் படைத்தவர்களைப் பற்றித்தான் இங்கே பேச்சு...

நல்லெண்ணமுடையோரைக் குற்றவாளிகளாக்கும் காரணங்கள் என்ன...? இந்தக் காரணங்களுக்குக் காரணமாயிருப்பவர் யார்...? என்பது பெரிய ஆராய்ச்சி... ஆனால் கடினமானதல்ல...செய்ய முடியாததல்ல. இந்த ஆராய்ச்சியிலே இறங்கி...அதனால் கிடைக்கும் உண்மைகளைச் சரியான நீதியில், பயன் தரும் முறையில் விளக்கி, குறை கண்ட இடங்களில் கூசாமல் கண்டித்து, விமர்சனங்கள் செய்து, அவசியமானபோது கிளர்ச்சிகளும் செய்வதனால்...தமிழ்ப்பட சீர்திருத்தத்திற்குப் பெரியதோர் கைங்கரியம் செய்த பெருமை கிடைக்கும் சினிமாப் பத்திரிகைகளுக்கு ...... நடக்குமா இந்தக் காரியம் ....?



மகாத்மா உதங்கரில் ஒரு காக்ஷி.
கொத்தமங்கலம் சீனுவும், அஞ்சலி தேவியும்

கலைப்பித்தா, பண ஆசையா?

ராஜு

"நாளைக்கு ஒரு நாள்கூட ஷூட்டிங் வைத்துக் கொண்டால் இந்த ஸெட்டை முடித்துவிடலாம்" என்றார் புரடுயூசர் டைரக்டர்.

"இல்லை, இல்லை. ஒரு வாரம் தள்ளிப் போடுங்கள் ஷூட்டிங்கை. நாளைக்கு நான் சேலத்துக்குப் போகவேண்டும். தந்தி வந்திருக்கிறது" என்று இடைமறித்துப் பேசினார் நடிகர்.

மூன்று நாள் தொடர்பாக ஷூட்டிங் நடந்தது. மூன்று நாட்களில் அந்த ஸெட்டை முடித்து விடலாம் என்று எண்ணியிருந்தார் டைரக்டர். அவர் எண்ணியபடி மூன்று நாட்களில் முடியவில்லை. அதின் காரணமாகத்தான் நாலாவது நாளும் தொடர்ந்து ஷூட்டிங் வைத்துக் கொள்வோம் என்றார் டைரக்டர். நடிகருக்கு வசதிப்படவில்லை. ஏனென்றால் சேலத்தில் அவர் வேறொரு படத்தில் நடிக்க ஏற்கனவே ஒப்பந்தம் செய்திருக்கிறார். செட் ஆயத்தமாய் இருப்பதாயும் ஷூட்டிங் ஆரம்பிக்க ஏற்பாடாகி விட்டதாயும், ஆகையால் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்றும் நடிகருக்கு சேலம் புரடுயூஸர் தந்திகொடுத்திருக்கிறார்.

நாலாவது நாளும் தொடர்ந்து படம் பிடித்து விடலாம் என்று எண்ணிய டயரக்டர் சங்கடத்தோடும் எரிச்சலோடும் நடிகருடைய மறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. நடிகரும் சேலத்துக்குப் போய்விட்டார்.

ஏககாலத்தில் ஆறு படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் இந்த நடிகரை ஆறு புரடுயூஸர்களும் ஸெட்டை ஆயத்தம் செய்து வைத்துக்கொண்டு ஷூட்டிங் நாட்களையும் திட்டம் செய்து நடிகரை வரவழைக்கிறார்கள். அந்த நாட்களில் ஒன்றோ இரண்டோ நாட்களை முன்னுக்கோ பின்னுக்கோ தள்ளிப்போட வேண்டுமானால் இந்த நடிகர் கிடைப்பது அரிது.

இந்த மாதிரியான ஒப்பந்தம் செய்து நடிக்கும் நடிகர்களும் நக்ஷத்திரங்களும் தமிழ் நாட்டில் யார் யார் என்று பெயர் குறிப்பிட வேண்டியதில்லை. பெரும்பாலான நடிகர்களும் அப்படியே. ஏன் இவர்கள் இவ்விதம் செய்கிறார்கள்? ஒரு நடிகருக்கு கொஞ்சம் பாட்டும் நடிப்பும் தெரிந்திருந்து கொஞ்சம் பேரும் உண்டாகும் காலத்தில், பல புரடுயூசர்கள் அந்த நடிகரையே விரும்புவது. நடிகர்கள் தங்கள் நடிப்புத் திறமையை உபயோகிக்க வழி தேடுவதும் அதிக ஊதியம் பெறுவதும்.

நடிகர்கள் ஏககாலத்தில் பல இடங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்வதினால் உண்டாகும் நன்மை, நடிகர்களின் பணப்பை நிறைவது ஒன்றுதான். அதினால் ஏற்படும் தீமைகள் அதிகம். முதலில் புரடுயூசருக்குத் தொந்தரவும் அசௌகர்யமும் அதிகம். சென்னையிலுள்ள ஒரு புரடுயூஸர் ஒப்பந்தம் செய்திருக்கும் நடிகர்கள் ஒருவர் கோவையிலும் மற்றவர் சேலத்திலும் இன்னும் ஒருவர் மைசூரிலும் வெவ்வேறு படங்களில் நடிப்பதற்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்து

ஆர். மாலதி



"மதனமாலா"வில் கதாநாயகன் ஸ்ரீராம்

கொண்டவர்கள். சென்னை பிரடூசர் ஷூட்டிங் நாள் நியமிக்கையில் கோவைக்கு போன நடிகர் தவருமல் திரும்பிவிடுகிறுர். ஆனல் சேலத்துக்கும் மைசூருக்கும் சென்றவர்கள் வந்து சேரவில்லை. ஷூட்டிங்கை ஒத்திப்போட வேண்டியதாகிறது. இந்த நடிகர்கள் எல்லாம் ஒன்று சேரும்போது ஸ்டுடியோ வசதி இல்லாதாகிறதும் சகஜம். இப்படியாக படத்தை வெளியிடுவதற்குப் பிரடூசர் போட்டிருந்த திட்டமும் எதிர்பார்ப்பும் வீணுகின்றன. இதனுல் ஏற்படும் பெரும் நஷ்டத்தை எண்ணி பிரடூசர் மனவருத்தம் அடைவதை யார் அறிவார்?

நடிகர்களுடைய புகழுக்குத்தான், இதனுல் பெரும் ஹானி ஏற்படுகிறது. ஏக காலத்தில் ஆறு படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யும்போது அதிக வருமானம் அடைவது பிரதான அம்சம் ஆகிவிடுகிறது. பணம் தேவைதான். ஆனல் நடிகர்களுக்குப் புகழ் தான் அதிலும் முக்கியம். புகழ்தேடிக் கொண்டால் என்றும் எங்கும் எவரும் விரும்புவார்கள். குறைவில்லாமல் வருமானமும் வரும். ஆனல் பண ஆசை இதை அநுமதிப்பதில்லை. கிடைத்தது லாபம், வருகிறதை விடுவானேன், கிடைக்கிற மட்டும் கிடைக்கட்டும். என்று ஒப்பர்தத்தில் கையெழுத்து ஏறிவிடுகிறது. இது பொன் முட்டை போடும் வாத்தைக் கொன்ற கதையாகிறது.

ஏக காலத்தில் பல படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யும் சம்பிரதாயம் மேல்நாட்டு ஸினிமாத் தொழிலில் இல்லை. அதன் மூலம் படத்தின் தன்மை கெட்டுவிடும் என்பது அவர்கள் அபிப்பிராயம். பரிபூரணமான அம்சங்களை நிறைத்தது, ரஸிகர்களை மகிழ்வித்து அவர்களுடைய நன்கு மதிப்பையும் பெறும்படியான படங்களைத் தயாரித்து அனுப்பும் மேல் நாட்டு சினிமாத் தொழிலாளரின் அபிப்பிராயம் நிச்சயமாயும் உண்மையாய்த்தான் இருக்கவேண்டும்.

ஆறு படங்களிலும் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்ட நமது நடிகர் அந்த ஆறு படங்களிலும் நாரதராகவே நடிப்பதாய் இருந்தால் குற்றம் இல்லை. ஒரே மனப்பான்மையும் பாவமும் உள்ள பாத்திரத்தை ஏற்றுக்கொள்வது தவறல்ல என்று தான் குறிப்பிடுகிறேன். இதற்கு நேர் மாருக ஒரு

எம். எஸ். சிவபாக்கியம்



ந தவிஜயத்தில் மாரியப்ப ஸ்வாமிகள்

ஸ்ரீமதி, ரஞ்சனா



சங்கீத வித்வான் ஸி. எஸ். ஜெயராமன்

படத்தில் முற்றும் துறந்த துறவியாகவும், மற்றொன்றில் ஐசுவரிய மமதையும் சுகபோக வாழ்வும் நிறைந்த அரசனாகவும், இன்னும் ஒன்றில் பொறுமையே உருவான ஓர் ஏழைத் தந்தையாகவும் நடிக்க முற்பட்டால் நடிப்பின் கதி என்ன ஆகும்? ரிஷியாய் நடிக்க வேண்டிய நேரத்தில் அதற்கு இரண்டு நாட்களுக்குமுன் ராஜாவாக நடித்த போக்கு வந்துவிட ஏதுவாகும், இம்மாதிரியாக நடிப்பில் முரண் ஏற்பட்டு நடிகரின் புகழ் நஷ்டப்படுகிறது.

ராஜாவாகவே இரண்டு படங்களிலும் நடிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு பாத்திரங்களும் ஒரே மனப் பான்மை உடையவர்கள் தானா? அல்லது ஒன்று துரியோதனனாகவும் மற்றொன்று பல ராமராகவும் இருக்கலாம். இவர்கள் இருவரும் ராஜாக்களே. சிங்காசனங்களில் கம்பீரமாய் வீற்றிருப்பவர்கள் தான். ஆயினும் இரண்டு பேர்களுடைய மனப்பான்மைக்கும் உலகத்தனை வித்தியாசம். இந்த இரண்டு பாத்திரங்களையும் ஒருவர் தாங்கி நடிப்பது நடிப்பின் தன்மையைக் குறைத்து விடுகிறது.

ஒரு படத்துக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு அதை நடித்து முடித்த பின் வேறு படத்தில் நடிக்க முனைந்தால் இக் குறையைப் போக்கலாம். மேல் நாட்டு நடிகர்கள் அப்படியே செய்து வருகிறார்கள். இதன் மூலம் முக்கிய நடிகர்களின் நடிப்பு இயற்கையாய் அமைந்து படம் சோபிப்பதோடு நடிகர்களும் புகழ் அடைகிறார்கள்.

இந்தப் பிரமாணத்தைக் கையாடுவதால் ஒரு நடிகருக்குத் தரப்பட்டிருக்கும் பாத்திரத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து அந்தப் பாத்திரத்தின் தன்மை, சுபாவம், சுயவியல்பு முதலியவற்றை உணர்ந்து நடிக்க முடியும். சரித்திர கதாபாத்திரமாயிருந்தால் அந்த அளின் பிரபல சிற்பமோ சித்திரமோ இருக்குமாயின் அவற்றைப் பார்த்து ஆராய்ந்து நடிகர் தன்னை சாக்ஷாத் அப்பாத்திரமாகவே நடிக்க ஏதுவுண்டு.

இவ்வளவு நுட்பமாக நடிப்பை தமிழ் படங்களில் யார் கவனிக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? அவ்வளவு சிரத்தை எடுக்கத் தவறுவதினால் தான் சில படங்களில் கதாநாயகனுடைய நடிப்புபல கட்டங்களில் ''காமிக்'' நடிப்பாயிருப்பது. உணர்ச்சிப் பெருக்கை முகத்தோற்றத்தில் பிரத்தியட்சமாய்க் காட்ட வேண்டிய கட்டங்களிலும், ஐந்து லக்கம் உள்ள தொகை வாங்கும் நடிகைகள்கூட மரக்கட்டை போல் காக்ஷியளிப்பது. லக்ஷக்கணக்கில் ரூபாய் செலவு செய்து சிரமப்பட்டு படத்தைத் தயாரித்து திரையிட்டதும் பத்திரிகைகளும் ரஸிகர்களும் வசை மொழிகளை அள்ளி வீசுவது. புரொடியூஸர் போட்ட பணத்துக்கு மேல் இரண்டு லக்ஷம் கூடுதல் விலைக்குப் படத்தை விற்று விட்டாராயினும் அதை வாங்கினவன் திண்டாடுகிறான். தியேட்டர் கிடைக்கவில்லை, கிடைத்த இடத்தில் வசூல் கம்மி; என்ற நிலையில் இருக்கிறது.

எல்லாப் படங்களும் மோசமானவை என்று நான் சொல்லவில்லை. தென் இந்தியப் படங்களுள் தனி மதிப்புக்கு உரியவை சில இருக்கின்றன. அவற்றைப் புகழ வேண்டிய கடமை உண்டு. ஏற்கனவே ரஸிகர்களின் மதிப்பை அவைகள் பெற்றிருக்கின்றன. இவை போன்ற மதிப்புக்குரிய படங்களைப் பெரும்பாலும் தயாரித்து வெளியிடுவதைத் தமிழ் நாடு விரைவில் காண வேண்டும்.

நடிகையின் குரல்

ரங்கராஜன்

ஆதவன் வானவீதியிலே தனது பவனியை நடத்தி முடித்து மேலக் கோட்டை வாயிலை அடைந்து விட்டான். அவ் வேளையிலே எனது வீட்டின் முன் புறமுள்ள தோட்டத்திலே உலாவிக் கொண்டிருந்தேன், நான். நக்ஷத்திர நடிகை, ரஜனிகாவல்லவா நானின்று. பேதை சரசாவாக நானிருந்த பொழுதுதான் எத்தனை ஆத்மாக்கள் என்னை தூஷித்தனர்; என்னைக் கண்டவுடனேயே, கரு நாகம் போல் சீறி விழுந்தனர் என் உற்றார், உறவினர். என் பால்ய சிநேகிதர்களாவது என்னை ஏறெடுத்தும் பார்த்தார்களா? முக்காலும் இல்லவே யில்லை. ஆனால்!

காலம் மாறியது. சரசா, ரஜனிகாவானாள். குடும்பப் பெண், சினிமாக்காரியானாள். தனது ஏழ்மை நிலையை உணர்த்தி உதவி நாடிய பொழுது வெறுத்த பலரும், தற்சமயம் நான் அவர்களை ஒருக் கணமேனும் நோக்கேனோ என்று ஏங்கி நிற்பது எனக்குத் தெரியாதா என்ன? ஆனால்!

அவர்களெல்லோரையும் குறை கூறிப் பயனென்ன? நாட்டின் கலாச்சாரப் பண்புகளையும், கலைச் செல்வங்களையும், சட்ட திட்டங்களையும் பிற நாட்டாரையும் அறிவுறச் செய்யும் இப் பத்திரிகை கூட்டங்கள் தான் என் ஏழ்மை நிலையைப் போக்க என்னதான் செய்தது. அப்போது என்னை ஏற இறங்கத்தான் பார்த்ததா? இல்லவே யில்லை. இந்த ஆசிரியர்களாவது தங்கள் கருணை கடாக்ஷத்தை எங்கள் பக்கம் திருப்பினார்களா? இல்லவே யில்லை. அன்று [ஏன், இன்றே யென்றுகூட எனக்குத் தோன்றுகின்றது] நாலே வருடங்கள் முன்னால், எனது வயது வந்த தந்தை, பேதை சகோதரிகள், பிறந்தகத்து சீர் மறவாத என் தாய் முதலியோருடன் சென்னையில் குடியேறினேன் நான். சென்னைக்கு வந்தேன். நல்ல காலம் எங்கும் "வீடு குடக்கூலிக்கு விடப்படும்'' என்ற அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மாத வாடகை ரூபாய் ஐந்து கொடுத்து ஓர்சின்ன இடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டேன். முதல் மாதத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிப் போட்டேன். அத்துடன் எங்கள் கையிருப்பும் தீர்ந்து விட்டது. பின்னர் அடுத்த மாத வாடகை, எப்படிக் கொடுப்பது, குடும்ப காலக்ஷேபத்தை எப்படி நடத்துவது என்றெல்லாம் நினைத்த போது, என் மூளையே கலங்கி விட்டது. அன்று முதலே எங்கள் ஜீவனத்திற்கான வழியை தேடலானேன்.

"ஞானசௌந்தரி"யில் லலிதா பத்மினியின் ஒரு நடனத் தோற்றம்.

ஏழ்மை நிலை என்னை பல கஷ்டங்களுக்குள்ளாக்கியது. எனது நிலைக்கு ஆறுதலளித்து தேற்றி கவனிப்பாரற்று, முடிவில் எப்படியேனும் உலகில் உழன்று உழைத்து என் குடும்பத்தை காப்பாற்ற வேண்டுமென்ற திடமான எண்ணம் ஏற்பட்டது. வெளிக் கிளம்பினேன் தைர்யமாய். வேலையை, எப்பேற்பட்ட தாயினும் சரியென்று, தேடி புறப்பட்டேன். எங்கும் உதவியில்லை. கடைசியாக நுழைந்தேன் ஓர் பத்திரிகை ஆபீசுக்குள். ஆசிரியரைப் பார்த்து உதவக் கோரினேன். அங்கும் வேலை காலி யில்லை. உதவ முடியாது என்ற பதில். மனம் உடைந்து வெளிக் கிளம்பினேன். என்னையே மறந்தேன். உலகில் உழலும் நடைப் பிணமாக நடமாடலுற்றேன் தெருவில். எனக்கே எங்கு நோக்கி சென்றேனென்று தெரியாது. திடீரென்று என்னெதிரே ஓர் யமன் போல் தோன்றி, என்னை எதிர் நோக்கி கனவேகத்தில் வந்து கொண்டிருந்தது, ஓர் அழகிய 'செவர்லெட்' கார்! க்ரீச் சென்ற ப்ரேக்

கின் சத்தம் என் காதைத் துளைத்தது. அதே சமயம் நானும் துள்ளிக் குதித்து எதிரிலிருந்த ஓர் வீட்டினுள் நுழைந்தேன். பயம் என்னையே மறக்கச் செய்தது. "யாரது?" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டெழுந்தேன். சுற்று முற்றும் பார்த்தேன். ஓர் ஆபீசறையில், அழகிய யுவதி யொருவள் அங்கு போடப்பட்டிருந்த சோபா ஒன்றில் உட்கார்ந்திருந்தாள். என்னை ஏற இறங்கப் பார்த்தாள். பின்னர்............

...... நாட்கள் ஓடி மறைந்தன. நானும் அன்று சொன்னேனே! அதே யுவதியாய் அன்றே சினிமாவில் நுழைந்தேன். முதலில் "எக்ஸ்ட்ரா" பின்னர் "உபநடிகை" பின்னர் படிப்படியாக முன்னேறி தற்போது நானும் ஓர் நக்ஷத்திர நடிகையாய் விளங்குகின்றேன். சினிமாவுலகம் என்னை, சரசாவை, ரஜனிகாவாக மாற்றி விட்டது. எந்தப் பத்திரிகையின் மேலட்டையைப் பார்த்தாலும் என் படம் மூவர்ணங்களில் அலங்கரித்துக் கொண்டிருந்தது. உள் பக்கங்களைப் பார்த்தாலோ மறுபடியும் அங்கும் எனது போட்டோக்கள் தான். எனது தினசரி வாழ்க்கையை அப்படியே தத்ரூபமாய் சித்தரிப்பதாக அவைகளைப் பற்றி எழுதி யிருந்தனர் அவ்வாசிரியர்கள் [அது உண்மையா?]

இந்த மாதிரியான எண்ணங்கள் தான் திரும்ப, திரும்ப என்னை வாட்டின. எண்ணங்கள் வர, வர, போட்டி போடுவதே போல் என் கால்களும் என்னை அத்தோட்டம் முழுவதும் இழுத்துச் சென்றன. டங்! டங்! டங்!...மணி 6 சரியாக! ஆசிரியர் நவீனன் எனது பேட்டியை அவரின் பத்திரிகையில் இந்த மாதம் பிரசுரிக்க வேண்டுமென்றும் அத்துடன் எனது 'போட்டோ' ஒன்று வேண்டுமென்றும் அதற்காக இன்று மாலை 6 மணிக்கு வருவதாக தெரிவித்திருந்ததும்



"கபடி அரக்ஷகாயா" என்னும் சிங்களப் படத்தில் ஒரு காமிக் ஸ்ட'ம்

சம்சார நௌகாவில் எம். ஜே. ஆண்டாள்

எனக்கு ஞாபகம் வந்தது. என்னையறியாமலேயே என் கண்கள் எனது பங்களாவின் வாயிலை நோக்கின. புன்முறுவல் பூத்த முகத்துடன் நவீனன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்!

ஆம்! என்னையும் அறியாமலேயே மறுபடியும் என் நெஞ்சம் திடமாகியது! பத்திரிகைகளையும் பத்திராசிரியர்களையும் வெறுக்கலானேன்! எனது கேள்விகளால் நவீனனை திணர வைக்க திட்ட மிட்டேன்!

"நமஸ்காரம்!"

தலையை நிமிர்ந்து பார்த்தேன்! சுமார் 32 வயதிருக்கலாம். அழகிய வதனம்! மெல்லிய தூய வெள்ளை வேஷ்டியுடுத்தி அதன் மேலொரு கதர் ஜிப்பா அணிந்து வந்திருந்தார் நவீனன். கையில் பையில்லை. இருவருமாய் மெல்லச் சென்று நாற்காலிகளில் அமர்ந்தோம்!

"எனது பேட்டியை நாடி வந்திருக்கும் தங்களுக்கு என் மனமார்ந்த வந்தனங்கள்! ஆனால்!......

நவீனன் தலை நிமிர்ந்தார்!

நான் "தங்களை சில கேள்விகள் கேட்க பிரியப்படுகிறேன்!"

“சம்சார நௌகா”வில் ஒரு காட்சி

“தாராளமாக கேட்கலா”மென்றார். உடன் ஆரம்பித்தேன் என் எண்ணங்களை கொட்டியளக்க.

“நண்பரே! ஏழையாயிருந்த பொழுது பலரை நாடினேன் நான்! சகலரும் கைவிரித்து விட்டனர். பத்திரிகாலயங்களும் கூட என்னை கைவிட்டுவிட்டன. பின்னர் விதி என்னை இந்நிலைக்கு கொண்டு வந்தது. மக்களின் மனதை கவர்ந்த தற்சமயம் போற்றி புகழ்கின்றது, பத்திரிகையுலகம். பரிதவித்து நின்ற போது ஆதரிக்க மறுத்தது இவ்வுலகம். ஆம்! எனக்கு செய்யும் பேருதவி என்றுதானே நினைத்து நீங்கள் எனது படங்களை பல விதத்திலும் பிரசுரித்து என்னைப்பற்றிய செய்திகளை பரவச் செய்து மக்களை பிரமிக்க வைக்கின்றீர்கள். ரஜனிகா! ஹா ஹ்...ஹா ஹ்...ஹா! (சிரித்து) பேதை சரசாவை யார் விரும்பினார்கள். இன்று ரஜினிகா உபயோகிக்கும் சோப்பு, ரஜினிகா வாங்கும் கூந்தல் தைலம் இன்னம் என்னவெல்லாமோ சொல்லி என் பெயரால் இச்சாமான்களை விற்கின்றனர். நான் இவைகளை கண்டுமறியேன்! ஆசிரியரே உங்கள் விளம்பரங்கள் செய்த கேட்டை உணர்வீர்களாக! என் பெயரை எட்டு திக்குக்கும் எட்டச் செய்தீர்கள். வாஸ்தவம்தான்! ஆனால் எனது தனிமையையும் குலைத்தீர்கள் அதே முயற்சியில். கடவுளை வழிபட கோவிலுக்குச் செல்ல முடியுமா? சாமான் வாங்க கடைக்குச் செல்ல முடியுமா? சந்தோஷமாய் காலங் கழிக்க, மன நிலையை மாற்ற ஏதேனும் சினிமா, அல்லது நாடகங்களுக்குத்தான் செல்ல முடியுமா? தனிமையையும் விரும்புவதாயிருந்தால் இவற்றைச் செய்யவே முடியாது! எங்கு சென்றாலும் உடன் ஒரே கூட்டம்! அதோ போகின்றாள் ரஜனிகா என்ற பேரிரைச்சலே சதா என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இது மட்டுமா? எனது படங்கள் பலவர்ணங்களில் தீட்டப் பெற்று பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் எப்படங்கள்! என் ஜீவனத்திற்காக, என் குடும்பம் பரிதவித்து நிற்பதைதடுப்பதற்காக நான் செய்யும் தொழிலின் போது, எனது நடிப்பின் போது எடுபட்ட படங்கள் அவை. மக்களின் மனதைக் கவர, “பாக்ஸ் ஆபீஸ்” என்ற பிசாசை ஏவி, “செக்ஸ் அப்பீல்” என்ற மந்திர உச்சாடனத்துடன் எனக்கு அணிவிக்கப்பட்ட வேடங்களில் எடுபட்ட படங்கள் அவை. பார்க்க, பார்க்க, எனக்கே ஒருபுறம் சிரிப்பை தருகின்றன அவை. கதையின் போக்குப்படியே தானிருக்கின்றது என்றே சொல்கின்றார் பட டைரக்டர் எனது ஆடைகளைப் பற்றி நான் கேட்டபோது. மக்களை வசியப் படுத்தும் மாந்த்ரீக சக்தி அதுவே என்று கூறி உங்களுக்கு அளிக்கின்றார் பிரசுரம் செய்ய பட முதலாளி; விசிறிகளின் மோகங்களை தணிக்கவென்று சமாதானம் செய்து கொண்டு சித்தரிக்கின்ற அவைகளைக் கொண்டே நீங்கள்! ஆனால்! இதனால் ஏற்படும் வினைகளை நீங்கள் சற்றேனும் கவனித்தீர்களா? இப்படங்களை காணும் மக்கள் அப்படங்களைக்கொண்டே அவ்வாதமக்களை மதிப்பிடுகின்றனர். ஆதலால் சுயவாழ்வில் அடக்க ஒடுக்கமாயிருக்கும் ஓர் பெண்ணும் “பட்டாம் பூச்கி”யாக கருதப்படுகின்றனள் மக்களால! என்ன விளம்பரம்!

இன்னம் இப்படியே சொல்லிக்கொண்டே போனேன். நான் முடித்துவிட்டு தலையைத் தூக்கிப் பார்த்தேன். நவீனனை காணவில்லை. சுற்று முற்றும் பார்த்தேன். சற்று தூரத்தில் என்னைப் பார்த்தவாறே புன் முறுவல் பூத்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார். என் கோபம் அதிகமாகியது. ஆனால் வாயிலிருந்து சொற்கள் வெளிவரவில்லை. தடை பட்டு விட்டது.

“ரஜனிகா! வீணே கோபமடையாதே! நிதானித்துக் கேள்.” என்றார்

ராம ராஜ்யம்

தமிழாக்கப்பட்ட ஹிந்தி படம்

வலம்புரி-சோமனாதன்

நடிகர்கள்: சோபனா சமரத்; பிரேம் அதீப்
டைரக்ஷன்: விஜயபட்
கதை: (சினிமாவுக்கென எழுதியவர்) ஸ்வர்கீய V. ஸ்ரீ. அவுந்தகர்.
ஹிந்தி மூலத்தில் படத்தயாரிப்பு: பிரகாஷ் பிக்சர்ஸ்
தமிழில் தயாரிப்பு: A.V.M. ஸ்டுடியோஸ்.

தமிழ்ப்படம் என்ற முறையில், இந்த 'ராம ராஜ்ய'த்தை விமர்சனம் செய்ய வேண்டுமானால், வசனம், பாட்டு தமிழில் எப்படி அமைந்துள்ளன, ஹிந்தி மூலத்தின் வசன உச்சரிப்புகளுக்கேற்ப, தமிழ்க்குரல் பொருந்தி நடிகர்களின் உதட்டு அசைவுகள் சரியானபடி கவனிக்கப்பட்டிருக்கின்றனவா, என்ற அளவோடுதான் நிற்க வேண்டும். இதர கலையம்சங்களைப் பற்றிய விமர்சனம் எல்லாம் ஹிந்தி ராமராஜ்யத் தயாரிப்பைப் பொறுத்தது. என்றாலும் தமிழ்ப் படமாகவே கொண்டு விமர்சனம் செய்தல் தான் நலம்.

கதை: ராமாயணத்தில் எந்தக் காண்டத்தை வால்மீகி பாடிமுடித்து, கம்பன் பாடாமல் விட்டானே. அந்த உத்தர ராமாயண சரிதம்தான் இது.

பதினான்கு வருஷ வனவாசத்திற்குப்பின் அயோத்தி திரும்பி, கோசலத்தை ஆண்ட மன்னன் ராமன், சில மக்களின் தூற்றுதலுக்காக, மீண்டும் சீதையை லக்ஷ்மணன் மூலம் வனத்தில் கொண்டு விடுகிறான். அங்கு வால்மீகி முனிவர் ஆசிரமத்தில், சீதை, வனதேவி, என்ற பெயரில் தங்கியிருந்து, லவன், குசன் என்ற இரு குழந்தைகளைப் பெற்றெடுக்கிறாள். குழந்தைகள் பெரியவர்களாகி, சகல கலைகலையும உணர்ந்து, ராமன் தங்கள் தந்தை என்பதை யறியாமலேயே, வால்மீகி ராமாயண பாராயணம் செய்து, ராமனையும், சீதையையும் தரிசிக்கவேண்டும் என்னும் ஆசையுடன் இருக்கிறார்கள். சீதை, ராமனால் தியாகம் செய்யப்பட்டதையும், பத்தினியைப் போன்ற பதுமையை வைத்து, ராமன் அசுவமேதயாகம் செய்வதையும் அறிந்த லவ, குசர்கள், 'உத்தம பத்தினியைத் தியாகம் செய்தவன், சக்ரவர்த்தியாக மாட்டான்' என்று ராமனுடைய அசுமேதயாகக் குதிரையைப் பிடிக்கிறார்கள். ராமனின் சைன்யங்களுக்கும், லவ, குசர்களுக்கும் யுத்தம் உண்டாகிறது. ராமனின் சைன்யம் தோற்கிறது. கடைசியில் ராமனே யுத்தம் புரிய வருகிறான். சீதையாலும், வால்மீகியாலும் சகலத்தையும் ராமன் அறிகிறான். தன் மக்களை அணைத்துக் கொள்ளுகிறான் ராமன். பிறகு பூமியினுள் சீதை மறைகிறாள்.

டைரக்ஷன்: ராமாயண காவியத்தைப் படிக்கும்பொழுது, ராமனும், சீதையும் நம் உள்ளத்தில் எந்தமாதிரியான உருவகம் பெறுகிறார்களோ, அதேபோன்று ராமன், சீதை கதாபாத்திரங்களுக்கு பிரேம் அதீப்பையும், சோபனா சமரதையும் தேர்ந்தெடுத்திருப்பதே, டைரக்ஷனின் சிறந்த வெற்றியாகும்.

கதையை ரஸம் குன்றாமல், அதே சமயத்தில் சிறிதளவு கூடச் சோர்வு ஏற்படாமல் எடுத்து முடித்திருப்பதும், நாஸ்தீகக் கொள்கையுடையவர்களும் பொழுது போக்குப் படம் என்ற சப்பைக்கட்டு முறையிலாவது, பழுது சொல்லாமல் ரஸிக்கும்படியும், படத்தை எடுத்திருப்பது, டைரக்டர் விஜய பட்டின் திறமையேயாகும்.

மஹாவிஷ்ணு ஆர். எஸ். ராமசாமி ஐயங்கார்
துளசிஜலந்தரில்

நடிப்பு: ராமனாக நடிக்கும் பிரேம் அதீப்பும் சீதையாக நடிக்கும் சோபனா சமரத்தும் எந்த இடத்திலும் நடிப்பின் சிறந்த நிலையிலிருந்து வழுவவில்லை. மற்ற எல்லா நடிகர்களின் நடிப்பும் குறையின்றியே இருக்கிறது.

வால்மீகியின் கதாபாத்திர சிருஷ்டி குன்றாமல், ராமனாகவும், சீதையாகவும் பிரேம் அதீப்பும், சோபனா சமரத்தும் நடித்திருப்பதுதான், இந்தப் படத்திலேயே மிக விசேஷம்.

தமிழாக்கம்: தமிழ்ப் புத்தக உலகில்தான், இதுவரை வேற்றுமொழியில் இலக்கியங்களை அவைகளில் உன்னதம் கண்டால், தமிழாக்கி வந்தார்கள். இந்த மொழிபெயர்ப்பு வேலை, இப்பொழுது தமிழ் சினிமா உலகிலும் நடைபெறுவது உண்மையிலேயே மிகவும் பாராட்டத் தக்கது. அதுவும் இந்த 'ராம ராஜ்ய'த்தை ஓரிரண்டு இடங்களைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் ஹிந்தி மூலத்தின் வசன உச்சரிப்புகளுக்கேற்ப, தமிழ்க் குரலைப் பொருத்தி, A. VM. ஸ்டுடியோக்காரர்கள் நல்ல வெற்றி கண்டிருக்கிறார்கள்.

சீதைக்கு ஸீமந்தம் நடைபெறுவதாக, வால்மீகியிடம். ஒரு பெண் சொல்லுகிறாள். அவளுடைய உதட்டு அசைவுகளுக்குத்தான் கொஞ்சம் கூடப் பொருந்தாமல், தமிழ் வசனமும், குரலும் அமைந்துள்ளது. இது போன்று முக்கியமல்லாத ஓரிரண்டு இடங்களில்தான் 'டப்' செய்தது சரியாகஇல்லையே யொழிய, பிரதான அம்சங்கள் எல்லாவற்றிலும் 'டப்' வெற்றிகரமாகவும் கவனத்துடனும் செய்யப்பட்டிருக்கிறது.

குடிமக்களின் மகிழ்ச்சியைக் காட்டுகிற பொழுது ஒரே ஒரு காட்சிமட்டும் அவர்களெல்லோருடைய ஆரவாரத்தையும் தகுந்தபடி 'டப்' செய்ய முடியாமலோ என்னவோ, A. VM. ஸ்டுடியோவில், அவர்களுடைய நடிகர்களைக்கொண்டு, எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.



"கபடி அரக்ஷகயா" சிங்களப் படத்தில் ஒரு காக்ஷி



விந்தியராணியில் வரலக்ஷ்மி

தமிழ் வசனம்: சிறந்த முறையில் எழுதப்படாவிட்டாலும், ஜனங்களுக்குப் பொருளை உணர்த்தக் கூடியதாகக் குறை தோன்றாதவாறு இருக்கிறது.

இன்றையத் தமிழ் சினிமா வசனகர்த்தாக்களைப் போலவே, இதற்குத் தமிழ் வசனம் எழுதிய K. தேவநாராயணனும், S. லக்ஷ்மி நாராயணனும் பதப் பிரயோகங்களையும், சொற்களின் வலிமை, பலவீனங்களையும சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

பாட்டு: நன்றாக இருக்கிறது. லவ, குசர்கள் "எங்கே, வைதேஹி!" என்று பாடும்பொழுது, படம் பார்ப்பவர்களுக்கு மயிர் கூச்செரிகிறது. பகவதி, P. G. வெங்கடேசன் இவர்களுடைய பாட்டுக்களும் நன்றாக இருக்கின்றன.

ஒலிப் பதிவு: ஓரிரண்டு இடங்களைத் தவிர, மற்றபடி நன்றாக இருக்கிறது. அடுத்து, வரும் பரத்-மிலாப்பின் வெற்றிக்கு இது ஒரு நற்சகுனம்.

ஒலிப்பதிவு படத்தின் முதல் பாதியில் கெட்டும், பின் பாதியில் சுமாராகவும் இருக்கிறது.

ஒளிப் பதிவு: நன்றாக இருக்கிறது. நிழலுருவப் படங்களாகச் சில காட்சிகள் எடுக்கப்பட்டிருப்பது மிகவும் ரசனைக்குரியதாகிறது.

ராமன் அகலிகைக்குக் கிருபை செய்ததிலிருந்து, சீதையை மணந்து வனவாசம் சென்று, மீண்டும் அயோத்தி வந்து,

அரசாள்வது வரை உள்ள, ராம ராஜ்யத்துக்கு முற்பட்ட கதையை, முதலில் நிழல் படங்களாகக் காட்டுவது, கதைக்குத் தொடர்பு தருவதாகவும், ஒளிப்பதிவுக்குச் சிறப்பைத் தருவதாகவும் இருக்கிறது.

மேக்-அப்: மிகவும் தெளிவாக அமைந்துள்ளது. அந்தக் காலத்து நாகரீகத்தை ஒருவாறு புலப்படுத்துவதாகவும் உள்ளது.

சித்திரக்கலை: இந்தப் படத்தின் பிரதான அம்சங்களில் இதுவும் ஒன்று. 'மீரா'வின் ஆர்ட் டைரக்டரும், இந்தியாவின் சிறந்த சித்திரக்காரர்களில் ஒருவருமான கனுதேசாய் தான் இந்தப் படத்தின் ஆர்ட் டைரக்டர். ராமன், சூர்யவம்சத்து அரசர்கள் எல்லோரையும் வணங்குவதாக எடுக்கப்பட்டுள்ள காட்சியில், சூர்யன் முதல் தசரதன் ஈருக உள்ள அவ்வளவு சிலைகளையும் கலை நுணுக்கத்துடன் கனுதேசாய் செய்துள்ளார். பயம், கோபம், இன்பம் போன்ற பலவித உணர்ச்சி பாவங்களையும் ஒரு பெண்ணைக் கொண்டு பல சிலைகளில் பல நிலைகளில் காட்டி யிருப்பது மிகவும் கலையம்சம் பொருந்தியது.

சீதையைத் தியாகம் செய்வதுபற்றி, வசிஷ்டர் ஜனசபை கூட்டிக் கேட்கும் பொழுது, அங்கு கூடியிருக்கும் வணிகர்கள், அந்தணர்கள், உழவர்கள் போன்ற பல திறப்பட்ட மக்களுடன் அவரவர்களின் குலமுறையை புலப்படுத்தும் ஜீவிய சித்திரங்களைச் சிலைகள் செய்து ஒப்பிட்டுக் காட்டியிருப்பது, உள்ளத்தைப் பறிக்கிறது.

சீதை வனத்திற்குச் செல்லும்பொழுது, ராமனைக் காணமுடியாமல் மயங்குகிருள். அப்பொழுது சுவரிலுள்ள ஒரு சிலையைக் காட்டியுள்ளார்கள். ஒரு பெண், தன்னுடைய அங்க முழுவதையும் அடக்கி பக்தி சிரத்தையுடன் வணங்குவது போன்றிருக்கும் அந்தச் சிலை, சீதையின் மயக்க நிலையை நன்கு புலப்படுத்துகிறது.

இதேபோல, படத்தின் ஒவ்வொரு கட்டங்களிலும், கனுதேசாயின் கலைநுட்பமான சித்திரங்கள் காட்சி தருகின்றன.

படத்தின் ஆரம்பத்தில் காணப்பெறுவது போல, பிற்பகுதிகளில் அதிகமான சித்திரங்களைக் காண முடியவில்லை.

பொதுவாக: குறை இல்லாமல் மிகவும் சிறந்து விளங்குகிறது. சீதை வனம்செல்லும் முன்னிரவில், சீதை என் மனக் கொந்தளிப்பையும், ராமனின் துயரத்தையும் ஒரே வீணையைக் கொண்டு காட்டியிருப்பது மறக்கமுடியாது.



டி. ஆர். மூர்த்தி, ரேடியோ பாடகர், சங்கீத டைரெக்டர்

கதை பழையது, இன்றைய நிலைக்குத் தேவையில்லாதது என்றாலும், பொழுது போக்குக்கும், கலையுணர்வுக்கும் அவசியம் பார்க்கவேண்டியது.

இந்த சினிமாவை ஒரு முறை பார்த்தால், ஒலிப்பதிவு விளங்காததற்காகவும், கனுதேசாயின் சித்திரங்களையும், சோபனா சமரத்தின் உயர்ந்த நடிப்பையும், பிரேம் அதீப்பின் இதழோரப் புன் சிரிப்பையும் பார்ப்பதற்காகவும், நீங்கள் நான்கைந்து முறைமீண்டும்பார்க்காமலிருக்கமாட்டீர்கள்.

இன்றைக்குப் பிரபலமெய்தியுள்ள பேபி கமலா, சிறுவயதில் ஆடிய நடனம் ஒன்றும் இதில் இருக்கிறது.

கலையம்ச மயமான வெற்றி பிரகாஷ் பிக்சர்ஸாருக்கும், தமிழில் ஆக்கிய முயற்சிக்காக நம் நன்றி A. V. M. ஸ்டுடியோக்காரர்களுக்கும் உரியது.

விந்தியராணி

வைஜயந்தி பிலிம்ஸ் ஜெமினி ஸ்டுடியோவில் தயாரித்த படம்

சகோதரனை ஜயவீரனைத் துரோகம் செய்து கொன்றுவிட்டு விந்திய தேசத்தின் பட்டத்தை அபகரிக்கிறான்—துர்ஜயன். இறந்துபோன ஜயவீரனின் குழந்தை சிவஸ்ரீயை அவருடைய நண்பர் சதமித்ர் ரகசியமாக வளர்த்து வருகிறார். சிவஸ்ரீ பெரியவனானதும் அவனுக்கு அரசாங்கத்தில் ஒரு உத்தியோகத்தை வாங்கிக்கொடுத்து, அவனது தந்தையைக் கொன்ற துர்ஜயனை பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று சிவஸ்ரீயிடம் ஒரு பிரதிக்ஞை பெற்றுக் கொள்ளுகிறார்.

விந்திய ராஜாவாகிய துர்ஜயன் ஸ்திரீகளை வெறுப்பவன். அவனுக்குக் கப்பம் கட்டும் ஒரு சிற்றரசனின் குமாரி அவந்தி என்பவள் மகா கர்வி என்றும் ஆண்களை நிந்திப்பவள் என்றும் கேள்விப்படுகிறான். ஆகவே அவளைத் தன் அரண்மனைக்குக் கொண்டுவரச் செய்து அவளுக்கு சகல ராஜ போகங்களும் கொடுத்து அவமதிக்கிறான். சிவஸ்ரீக்கு அவந்தி பேரில் அநுதாபம் ஏற்பட்டு நாளடைவில் காதலாக மாறுகிறது.

ஒரு நாள், விந்திய ராஜாவும் மந்திரியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தவைகளை சிவஸ்ரீ பதுங்கியிருந்து கேட்கிறான். அவந்திக்கு இன்னும் விவாஹமாகவில்லை என்பதையறிகிறான். ஆகவே அவன் பகிரங்கமாக அவளுடைய காதலை ஏற்றுக் கொள்ளுகிறான்.

இப்படி யெல்லாம் நேருமென்று சதமித்ரர் எதிர்பார்க்கவேயில்லை. ராஜாவைக் கொன்று பிரதிக்ஞையை நிறைவேற்றும்படி சிவஸ்ரீயிடம் சொல்லுகிறார். முதலில் மறுக்கிறான்; பிறகு ஒப்புக் கொள்ளுகிறான். சிவஸ்ரீ அவந்தியிடம் சென்று அவர்களுக்கு மத்தியில் பெரிய பிளவு இருப்பதால் தன்னை மறந்து விடும்படி கேட்கிறான்.

அன்றிரவு சிவஸ்ரீ ராஜாவின் அறைக்குள் பிரவேசித்து அவனைக் கொல்லுவதற்குப் பதிலாக தன் சுய சரிதையை கூறி, ராஜாவுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து கண்யமாக வெளியேறுகிறான். ராஜா குழப்பமடைந்து சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறான்.

விந்தியராஜா உயிருடன் இருக்கும் வரை சிவஸ்ரீயை அடைய முடியாதென்று கருதி, அவந்தி ராஜாவின் அறைக்குள் சென்று அவனைக் கத்தியால் குத்திவிட்டு சிவஸ்ரீயிடம வந்து தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறாள். சிவஸ்ரீ அவளைக் கொலையாளி என்று ஏசுகிறான். காதல் வெறுப்பாக மாறுகிறது ஆத்திரமடைந்த அவந்தி, கொலைக் குற்றத்தை சிவஸ்ரீயின் பேரில் சுமத்துகிறாள்.

"விந்தியராணி"யில் புஷ்பவல்லி

ராஜா உண்மையில் கொல்லப்படவில்லை. கத்திக்காயத்துடன் அவன் பாதாள அறைக்குள் தப்பிச் சென்று பதுங்கியிருந்து, மேற்கொண்டு என்ன நடக்கிறதென்று கவனித்து வருகிறான். கொலைக் குற்றம் சாட்டப் பெற்ற சிவஸ்ரீக்கு தண்டனையாக விஷம் கொடுக்கும்படி ஆக்ஞை பிறக்கிறது. காவலாளியின் உதவியால் விஷத்தை அகற்றிவிட்டு மதுவை அனுப்பி வைக்கிறான் ராஜா.

தன்னுடைய கொடிய செயலுக்காக பச்சாத்தாபப்பட்ட அவந்தி, சிறைக்குச் சென்று சிவஸ்ரீயை தப்பித்துக் கொள்ளும்படி சொல்லுகிறாள். அவன் மறுக்கிறான். ஆகவே அவந்தி அவனுக்காக வந்திருந்த "விஷ"த்தைக் குடித்து விடுகிறாள்.

சிவஸ்ரீயும் அவனுடைய காதலியைப் பின்பற்ற விரும்பி தற்கொலை செய்து கொள்ளப் போகிறான். அப்பொழுது ராஜாவும் சதமித்திரரும் தோன்றுகிறார்கள். இளம் காதலர்களிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு ராஜா நாட்டை விட்டு வெளியேறுகிறான்.

ரத்னமாலாவில் பானுமதி

விந்தியராணியில்
புஷ்பவல்லி

பேனாவையும் பட்டயத்தையும் விட வல்லமையுள்ளது

பட்டயத்தைவிட பேனா வல்லமையுள்ளது என்பது ஓர் பழமொழி. ஆனால் இன்று இவ்விரண்டையும்விட "பிலிம்" வல்லமையுடையது என்று திருத்தி அமைக்க வேண்டும். ஏனென்றால் மனித வாழ்க்கையில் "பிலிம்" அவ்வளவு அதிக அற்புதங்களைக் கைகூடச் செய்திருக்கிறது.

சிறுவர் முதல் முதியோர் வரையிலும் கல்வி அறிவு ஊட்டுவதற்கு இதைவிடச் சிறந்த சாதானம் வேறொன்றில்லை. வர்த்தக உலகில் விற்பனையைக் கூட்டவும் தொழிலின் நல்லெண்ணத்தைப் பரப்பவும் ஸினிமா அதிகப் பிரயோஜனமாய் இருக்கிறது. ஒரு நாட்டைப் பற்றி இன்னொரு நாட்டில் நல்லெண்ணம் உண்டாக்கும்படி நாகரீகமான எல்லா நாடுகளும் ஸினிமாவை உபயோகித்துப் பயன் அடைகின்றன.

கடந்த உலகயுத்தத்தின் போதுதான் இந்த ஸினிமாத் தொழிலின் மஹாத்மியத்தை மக்கள் நன்குணர ஏதுவானது. ஹிட்லரின் நாஜிப் படைகள் மின்னல் வேகத்தில் ஹாலந்து, டென்மார்க், பெல்ஜியம் என்னும் நாடுகளைக் கைப்பற்றி பிரான்சுக்குள் புகுந்த போது இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நேச நாடுகள் படைகளைத் திரட்டிப் பயிற்சித்துக்கொண்டுதான் இருந்தன. இப்பயிற்சியில் அதிகப் பிரயோஜனமாய் இருந்தது ஸினிமா. அநேக மாதங்களில் அரை குறையாய் கற்பிக்கப்பட்டிருக்க வேண்டிய முக்கியமான விஷயங்களை ஒரு சில நாட்களில் எளிதில் புகட்டிவிட்டது. இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள், துப்பாக்கிகள், விமானம் வீழ்த்தும் துப்பாக்கிகள், டார்ப்பிடோக்கள் இன்னும் இவை போன்ற சிக்கலான ஆயுதங்களைத் திறமையுடன் உபயோகிக்கக் கற்பிப்பது எளிதல்ல. தங்கள் வாழ்க்கையில் இவ்வித யுத்த தளவாடங்களைத் தொட்டும் பார்த்தறியாத லெக்ஷக்கணக்கானவர்கள் புதிதாய் ராணுவத்தில் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகையில் துணையாய் நின்றது ஸினிமா.



ஜெமினி "நந்தனார்" புகழ் டைரக்டர் முருகதாஸா (முத்துசாமி ஐயர்) இப்பொழுது ஜெமினியின் "ஞானசௌந்தரி"யை சிருஷ்டிக்கிறார்



பல படங்களை உன்னத முறையில் டைரக்ட் செய்த டைரக்டர் ஸ்ரீ. ஜீ. பட்டு ஐயர்

இம் மாதிரியான நன்மையை மேல் நாட்டார் விவசாயத் துறையிலும் ஸினிமாவின் மூலம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டு சர்க்கார் ஸினிமாத் தொழிலின் மகிமையை அறிந்து உபயோகிக்காது இருப்பது நாட்டின் நிர்பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்று ஆகாரக் குறைவினால் நாட்டில் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் யாவரும் அறிந்த சத்தியம். பிரிட்டிஷாரின் ஆதிக்கம் நீங்கி விட்டால் நாடு சுபிட்சம் அடைந்து விடும் என்று எதிர்பார்த்ததெல்லாம் பகற்



இந்தியாவில் அதிகப் பணச்செலவில்
ஜெமினி தயாரிக்கும்
"சந்திரலேகா"வை
டைரக்ட் செய்யும் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன்
ஜெமினி ஸ்டுடியோ சொந்தக்காரர்

கனவாய்த்தான் இருக்குமோ என்ற பீதியும் இல்லாமல் இல்லை, ஆகாரப் பஞ்சம் தீருவதற்கு உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று கூறிவந்த நமது காருண்ய சர்க்கார் இப்பொழுது அதற்கென்ற ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அத் திட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையையும் மற்றும் புள்ளி விவரங்களையும் பார்க்கையில் தோட்டத்தில் பாதி வேலி என்ற கதையாய் இருக்கிறது.

இந்த திட்டத்தில் ஸினிமாத் தொழிலின் உதவி அதிகப் பலன் தரும் என்பதை எடுத்துக் காட்டுகிறோம்.

யுத்தத்துக்கு முன் சமாதான காலத்தில், விவசாயிகள் நாளடைவில் தங்கள் தொழிலைச் சாமர்த்தியமாய் நடத்துவதற்கு வேண்டிய சிரமம் எடுக்காமல் இருந்துவிட்டார்கள். அன்று அதனால் பெரிதான விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. இன்று அவசியம் அதிகம். மிகவும் திறமையுடன் விவசாயம் செய்தால் அன்றி நாட்டின் பசிப் பிணியை நீக்க முடியாது. இதற்கு எண்ணிறந்த முறைகளில் ஸினிமாவை உபயோகிக்கலாம். ஸினிமாவின் மூலம் கற்பிக்கப்படும் பாடங்கள் எளிதில் மனதிலாகுவதுடன் அதிக நாள் ஞாபகத்திலும் இருக்கின்றன.

ஆகையால் சாமர்த்தியமாய் விவசாயம் செய்வதற்கு வழி காட்டும் ஸினிமாப் படங்களைத் தயாரித்து கிராமங்கள் தோறும் காட்ட வேண்டும். ஒரு தோட்டம் பயிர் செய்யும் முன் செய்ய வேண்டியவை; நிலத்தைச் சாகுபடி செய்தல்; விதை விதைக்க வேண்டியது எப்போ, எவ்விதம்; நோய் இல்லாமல் பயிரைக் காத்தல்; பிடுங்கி நடுதல்; பழைய நிலங்களை மேலும் வளப்படுத்துவது; தரிசு நிலங்களைச் சாகுபடி செய்தல்; இன்னும் இவை போன்ற பல பிரதானமான விஷயங்கள் பற்றி நுட்பமான அறிவைப் புகட்டும் படங்கள் தயாரித்துக் காட்டுவது உணவுப் பொருள் உற்பத்திக்கு அதிகப் பிரயோஜனமாய் இருக்கும். மூவாயிரம் அல்லது நாலாயிரம் அடி நீளமுள்ள படங்கள் தயாரிப்பதற்குப் பிரமாதமான செலவு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை.

யுத்த காலத்தில் ராணுவத்தில் சேர்ந்தவர்களுக்கு ஸினிமா மூலம் எவ்வளவு சீக்கிரம் பயிற்சி தந்து பலனடைய முடிந்ததோ, அதைவிட அதிக சீக்கிரம் விவசாயப் படங்கள் மூலம் உணவுப் பொருளை பெருக்கலாம்.

ஸினிமாத் தொழிலில் இந்த சேவையைச் செய்து தருவதற்குத் தகுந்தவர்கள் யார் யார் என்று கண்டு பிடிப்பதுதான் சர்க்காருக்குச் சிரமம். இதற்கு வேண்டிய அறிவும் திறமையும் உள்ள ஸினிமாத் தொழிலாளிகள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்.

விவசாய நிபுணர்களும் ஸினிமாக் கலைஞர்களும் ஒத்துழைத்தால் நாட்டின் உணவுப் பஞ்சம் வெகு சீக்கிரம் தீரும்.

*

தென் இந்திய சினிமாத் தொழிலை ஆரம்பித்து
வளர்த்து வரும் பிரபல டைரக்டர்
ஸ்ரீ கே. சுப்ரமண்யம்

புரியவில்லை!

★

தமிழ்வாணன்

கதவைத் திறந்தாள்.

எதிரே முன்பின் தெரியாத ஒரு புது முகம்! நல்ல மழை! மழையிலே அவன் ஊறிக்கொண்டிருந்தான். இன்னும் விடியவில்லை; விடிந்து கொண்டிருக்கிறது. மங்கிய ஒளி கலந்த இருட்டில் தனக்கு எதிரே நிற்பது அவளுக்கு யாரென்று புரியவில்லை! விடிந்தும் விடியாமலும் இருக்கும் இந்த நேரத்திலே யாரோ புதிய மனிதருக்கு எதிரே தனியாக நிற்பது அவளுக்குப் பயமாக இருந்தது. என்ன நினைத்தாளோ? பட்டென்று திறந்த கதவைச் சாத்திவிட்டாள். கொஞ்சங்கூட யோசிக்கவில்லை!

மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. சிவராமன் திக்பிரமை பிடித்து நின்றான். என்ன செய்வது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! மெல்லச் சிரித்துக் கொண்டே, மறுபடியும் 'அண்ணா, அண்ணா' என்று கத்திக் கதவைத் தட்டினான்.

கதவு திறந்தது.

இந்தத் தடவை அவள் கதவைச் சாத்தவில்லை! தனக்கு எதிரே நிற்கும் அந்தப் புதிய மனிதனை அவள் இரண்டுமூன்று முறை உற்றுப் பார்த்தாள். அந்தப் புதிய முகத்திலே தன் கணவனின் சாயை, குழைந்து கிடப்பதைப் பார்த்ததும் அவளுக்கு நினைவு மெல்ல மேலெழுந்தது. அந்த மென் நினைப்பு அவள் இமை மடல்களை மெல்லக் கீழே இறக்கியது, இறங்கி இமைத்து மூடிக்கொண்ட இமைக் கதவுகள் திறக்கவே இல்லை! அவனை யார் என்று அந்தக் கண்கள் தெரிந்துகொண்டு விட்டன.



கோகுலதாசியில் ஹொன்னப்பாவும் எம். வி. ராஜம்மாவும்

சிவராமன் இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் பார்க்காதவன். ஆகையால் சந்தர்ப்பத்தைச் சமாளிப்பது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால், ஒரு 'காலேஜ்' மாணவனால் இதைக் கூடவா சமாளிக்க முடியாது? வாயைத் திறந்தான். வார்த்தைகள் வெளி வரவில்லை? குளிர்!

"அண்ணன்..."

"நீங்கள் தெப்பமாக நனைந்திருக்கிறீர்களே..."

"அண்ணன்..."

"நனைந்துகொண்டே நிற்காதீர்கள்; கொஞ்சம் உள்ளே வந்துவிடுங்கள்..."

"அண்ணன்..."

"வேறு வேஷ்டி சட்டை தருகிறேன்; முதலில் கொஞ்சம் உள்ளே வந்து விடுங்கள்"

"அண்ணனை..."

"ஐயோ; இப்படித் தெப்பமாக நனைந் திருக்கிறீர்களே; சொன்னால் கேளுங்கள்; முதலில் உள்ளே வந்து விடுங்கள்"

"அண்ணனைப் பார்க்க..."

"சொல்கிறேனே... நீங்கள் முதலில் உள்ளே வந்து விடுங்கள்; சொன்னால் கேளுங்கள், உடம்பு கெட்டு விடும்..."

"அண்ணன் இருக்கிறார்க..."

"நீங்கள் உள்ளே வரப்போகிறீர்களா? இல்லையா?"

சிவராமன் உள்ளே நுழைந்தான்.

குளிர்காற்றும், இறசலும் அடிக்காமல் இருக்க அவள் முதலில் கதவைச் சாத்தினாள். பிறகு உள்ளே ஓடிப்போய்த் தன் கணவன் பெட்டியைத் திறந்தாள். ஒரு வேஷ்டியையும், சட்டையையும் எடுத்துக் கொண்டு அவனிடம் கொடுத்தாள்.

சிவராமன் அவைகளை வாங்கிக்கொண்டே, "அண்ணன் எங்கே என்று சொல்லுங்கள்" என்றான் புளித்துப்போன குரலில்.

நடனம் கிருஷ்ணமூர்த்தி

"இந்தாருங்கள் துண்டு; இதனால் உடம்பில் கொஞ்சம்கூட ஈரம் இல்லாமல் துவட்டிக் கொண்டு, சட்டை வேஷ்டியை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, விர்ரென்று ஹாலின் மற்றொருபுறத்துக் கதவைச் சாத்திக்கொண்டு சிட்டாய்ப் பறந்து விட்டாள் பொன் வண்டு மாதிரி!

சிவராமன் மெல்லச் சிரித்தான். துண்டை எடுத்து மெல்லத் துவட்டி வேஷ்டி சட்டையை மாற்றிக் கொண்டான். இப்பொழுது உடம்பு அவனுக்குக் கத கதவென்று இருந்தது. எங்கோயோ இருந்த சுறு சுறுப்பு அவன் உடம்பிற்குள் புகுந்து கொண்டது. மனம் சிறகு விரித்து......

அவள் வந்தாள்.

"அண்ணன் எங்கே?"

"குளிக்கப் போயிருக்கிறார்"

"இங்கே குளிப்பதில்லையா?"

"இல்லை"

"பின்னே எங்கே குளிக்கிறார்?"

"அவருக்குத் தெரிந்த அவருடைய நண்பர் வீட்டில்"

"இந்தக் கொட்டுகிற மழையிலா?"

"இல்லை; மழை பெய்வதற்கு முன்பே போய்விட்டார்"

"இந்த மழையில் கூடவா குளிக்க வேண்டும்?"

"நான் சொன்னால் அவர் காதில் ஏறாது"

"உடம்புக்கு ஆகாதே"

"நான் வேண்டிய மட்டும் சொல்லி விட்டேன்"

"அண்ணன் எப்பொழுதுமே இப்படித் தான்; சுத்தப் பிடிவாதக்காரர்"

"எப்பொழுது வருவார்?"

"நேரம் ஆகும்"

"சரி...நான்...வருகிறேன்"

"இருங்களேன்; இப்பொழுது வந்து விடுவார். பார்த்து விட்டுப் போகலாம். பால்கூட வந்துவிட்டது. சூடாகக் காபி தருகிறேன். இன்னும் மழைகூட நிற்கவில்லைபோல் இருக்கிறதே"

"இல்லை......எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. என் சினேகிதன் ஒருவனை என்ரூமிலே உட்கார வைத்துவிட்டு வந்திருக்கிறேன் ஐந்து நிமிஷத்திலே அண்ணனைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். முடியவில்லை. நேரம் ஆகும்போல் இருக்கிறதே; நான் மறுபடியும் வருகிறேன்"

எஸ். டி. சுப்புலெக்ஷ்மி

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

"இன்னும் மழை பெய்து கொண்டிருக்கிறதே"

சிவராமன் தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான். நல்ல மழை! அவன் முகத்தில் வேதனை எறிப்பரந்தது. திரும்பவும் மெல்லக் கதவைச் சாத்தினான். திரும்பி அவளைப் பார்த்து "குடை இருக்கிறதா" என்று கேட்டான்.

"அதைத் தவிர மற்றதெல்லாம் இருக்கிறது"

அவன் சிரித்தான்.

"சரி சரி சீக்கிரம் போங்கள்; ரூமிலே உங்கள் சிநேகிதர் காத்துக்கொண் டிருப்பார்" என்று சொல்லிக்கொண்டே, அவள் கதவைத்திறந்து வழி காட்டினாள்.

கதவு திறந்து கிடந்தன.

இரசல் அடித்தது.

தன் அண்ணன் மனைவியை அவன் ஆரம்பத்தில் ஊமைமாதிரி நினைத்துக்கொண் டிருந்தான். ஆனால், இவவளவு பெரிய குறும்புக்காரி என்பது அவனுக்கு இப்பொழுதுதான் தெரியும்.

கதவைச் சாத்திவிட்டு, "இருங்கள் இதோ காப்பி கொண்டுவருகிறேன்" என்று உள்ளே பறந்தாள்,

சிவ்ராமன் திரு திருவென்று விழித்துக் கொண்டே, நடுஹாலில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். நேரம் சென்றது; காப்பி வந்தது. சிவராமன் காப்பியைக் குடித்தான். குளிர்வீசும் அந்த நேரத்திலே சூடான காப்பி அதனுக்குச் சுகமாக இருந்தது. இரண்டு 'டம்ளர்' காப்பியைக் குடித்துத் தீர்த்தான். கொஞ்சம் தெம்பு வந்தது. நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"நீங்கள் காப்பி குடிக்கவில்லையா?"

"உங்கள் அண்ணன் வரவேண்டும்"

சிவராமனுக்கு வேறு என்ன பேசுவது என்று தெரியவில்லை. அவன் வந்த காரியம் வேறு. அவன் அறையில் அவன் நண்பன் கண்ணனை உட்கார வைத்துவிட்டு, 'இரு வந்து விடுகிறேன்' என்று சொல்லிவிட்டு வந்தவன் இங்கே வந்து இப்படி அகப்பட்டுக் கொண்டு விட்டான். விடிவதற்கு முன் கருக்கிருட்டில் அவன் நண்பன் கண்ணன் வந்து அவனை எழுப்பினான். எதற்கு? பணத்திற்குத்தான்! அவன் தம்பிக்கு உடம்பு சௌகரியம் இல்லை என்று தந்தி வந்திருந்தது. ஊருக்குப்போக கையிலே காசு இல்லை! சிவராமனை எழுப்பி ஒரு பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு போகலாம் என்று நினைத்துத்தான் அவனை வந்து அந்த கருக்கிருட்டில் எழுப்பினான்.



மொய்லன். ஜெமினி ஸ்டுடியோவை, இந்தியாவில் தலைச் சிறந்த ஓர் ஸ்தாபனமாக்கிய பெருமை இவரைச் சேரும். ஜெனரல் மானேஜராய் இருந்து ஜெமினியை நிர்மாணம் செய்தபின் இந்தியன் நியூஸ் பரேட் டயரக்ட்டராய் சேவை செய்தார்.

சிவராமனிடத்திலேயும் கையிலே காசு இல்லே. கண்ணன், சிவராமன்தான் கதி, எட்டரைமணி வண்டிக்குப்போய் ஆக வேண்டும் என்று சொல்லிவிட்டான். தடுக்க முடியாத இந்த நிலைமையில், அண்ணனிடம் ஒரு பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு போக லாம் என்றுதான் வந்து, இப்படிச் சிக்கிக் கொண்டான் அவன்.

இருவரும் மௌனமாக இருப்பது இரு வருக்கும் சங்கடமாக இருந்தது.

"சரி; நான் வரட்டுமா?" என்று எழுந் தான் சிவராமன்.

"என்ன காரியம்? சொல்லக்கூடிய காரிய மாக இருந்தால் சொல்லிவிட்டுப் போங்க ளேன்; நான் வந்ததும் சொல்கிறேன்"

"அப்படிப் பிரமாதமான காரியம் ஒன்றும் இல்லே"

"சரி"

"நான் வரட்டுமா?"

"சரி"

சிவராமன் வெளியே வந்தான். நடக்க ஆரம்பித்தான். பின்னால் கதவு சாத்திய சத் தம் கேட்டது!

வீராப்பாக வெளியே வந்துவிட்டான்! ஆனால், மனசு இசுவு வந்தவனுக்கு உதைத் துக் கொண்டமாதி உதைத்துக் கொண்டது. அறைக்குப் போனால், கண்ணன் பழியாக நந்திமாதிரி உட்கார்ந் திருப்பானே? அவ னுக்கு என்ன பதிலைச் சொல்வது? விடிந்து கொண்டிருக்கும் இந்த நேரத்திலே யாரிடத் தில்போய்ப் பணம் கேட்பது? என்ற நச்சு நினைப்பு அவன் உள்ளத்தைக் குடைந்தது.

தெருவின் திருப்பம்வரை போனவன், மறு படியும் திரும்பி வந்தான்!

ஏன்...ஏனோ?

கதவைத் தட்டினன்

குளித்துக்கொண்டிருந்த சீதை, தன் கண வன்தான் என்று நினைத்து, அப்படியே ஈரப் புடவையுடன் வந்து கதவைத் திறந்தாள்.

எதிரே பிரம்மஹத்திமாதிரி நின்றுகொண் டிருந்தான் சிவராமன்! அவ்வளவுதான்! பேயடித்த அவன் மூஞ்சியைப் பார்த்ததும் அவள் சிட்டாய்ப் பறந்துவிட்டாள். சிவரா மன் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். வெகுநேரம் ஆயிற்று. உள்ளே போனவள் உள்ளே போனவள்தான்! வெளியே தலே

நவாப் எம். கே. ராதா. கலேக்குச் சேவை செய்வது இவரது பிதுரார்ஜித சொத்து. ஜெமினி "சந்திரலேகா"வில் கதாநாயகனும் இப்பொழுது நடித்துக் கொண்டிருக்கிருர்.

காட்டவே இல்லை! சிவராமனுக்கு நின்று, நின்று கால்வலித்தது. உள்ளே கிடந்த நாற்காலியில்போய் உட்கார்ந்து கொண்டான். வெகுநேரம் ஆகிவிட்டது. உள்ளேபோன ஆளையும் காணோம்! வெளியேபோன ஆளையும் காணோம்! 'கண்ணன் ரயிலுக்கு நேரமாகிவிட்டது என்று தவிப்பானே!' சிவராமனுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. நாற்காலியைவிட்டு வெளியே வந்து, கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான் தெருவின் திருப்பம்வரை பார்த்தான்.

அண்ணனைக் காணோம்.

உள்ளே வந்து; உள்தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, " அண்ணன் வந்தால் என்றுமிற்கு வரச்சொல்லுங்கள்; நான் வருகிறேன் " என்றான் சன்னக் குரலில்.

பதிலைக் காணோம்!

இன்னும் கொஞ்சம் உள்ளே போய் எட்டிப் பார்த்தான். அது சமையலறை. சீதை நன்றாக முடுக்கி உட்கார்ந்து கொண்டு, குனிந்து, ஏதோ கறி நறுக்கிக் கொண்டிருந்தாள். சிவராமன் சமையலறையின் கதவிற்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டான்.

மெல்லத் தனிந்த குரலில், "ஒரு பத்து ரூபாய் வேண்டுமே" என்றான்.

சீதை நிமிர்ந்து பார்த்தாள்.

இன்னும் அவளுக்கு வெட்கம் போகவில்லை! குறும்புச் சிரிப்போடு வெட்கம் திரையிட எழுந்து பக்கத்தில் இருந்த அலமாரியைத் திறந்தாள். அதற்குள்ளே ஒரு சம்படம் இருந்தது. அதற்குள்ளே இருந்தது ஒரு பழைய பத்து ரூபாய் நோட்டு! அதை எடுத்துக் கொண்டு வந்து சிவராமனிடம் கொடுத்தாள். சிவராமன், நோட்டை வாங்கிக் கொண்டான். அவன் முகத்தில் நன்றி துளித்தது.



"கங்கண"த்தில் ஒரு காக்ஷி



டயரக்ட்டர் வாஸகம் அநேக படங்களை திரை உலகுக்குத் தந்தவர். "கங்கணம்" இவருடைய கடைசி சிருஷ்டி.

நன்றி ததும்ப, இதை சாயந்தரத்துக்குள் கொண்டு வந்து தந்து விடுகிறேன்" என்றான்.

"வேண்டாம்"

"ஏன்?"

சீதை பதில் சொல்ல வில்லை?

"அண்ணன் வீட்டுச் செலவுக்குத் தந்த பணமாக இருக்கும்; வீட்டுச் செலவிற்கு வேண்டியதிருக்குமே."

"உங்கள் அண்ணன் அப்படியா பஞ்சையாக இருக்கிறார். அவரிடத்திலே வேண்டிய பணம் இருக்கிறது! அதுவும் உங்கள் பணந்தானே!"

சிவராமனுக்கு, ஏண்டா வாயைக்கொடுத்தோம் என்றாகிவிட்டது. தான் மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசுகிறோம் என்று நினைத்துக் கொண்டு பேசினான். அவளுடைய பதிலுக்குப் பிறகுதான் தான் எவ்வளவு கோமாளித்தனமாகப் பேசி யிருக்கிறோம் என்பது தெரிந்தது.

அவள், அவன் முகத்தில், அசடு வழிவதைப் பார்த்ததும் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

அத்துடன் அவள் விட்டிருந்தாலும், அவன் அசட்டுத் தனத்திற்கு மாறுவது ஏற்பட்டிருக்கும்!

"இது உங்கள் அண்ணன் பணம் இல்லை; இது என் சொந்தப் பணம்"

அவள் குரலில் கலந்து தட்டிய பெருமையைச் சிவராமன் கவனிக்காமல் இல்லை.

டயரக்ட்டர் புரொடியுசர் பி. எஸ். ரங்கா போதிய வசதிகள் கிடைக்குமாயின் பலஅற்புதங்களைத் திரைக்குக் கொண்டுவரும் ஆற்றலுடையவர்.

"நான் வரட்டுமா?"

"சரி"

"அண்ணனிடம் செல்ல வேண்டாம்"

"சொல்லுவேன்"

"சொல்லுவாயா?" ('நீங்கள் நாங்கள்' எல்லாம் போய்விட்டது!)

"ஆமாம்"

"என்ன சொல்லுவாய்?"

"நீங்கள் இல்லாத சமயம் பார்த்து, உங்கள் தம்பி இங்கே வருகிறார் என்று தான்."

"சீ...சுத்த..."

சிவராமன் வார்த்தையை முடிக்காமலே, வெளியே ஓடிவிட்டான்!

சீதை கதவை தாழிட்டு விட்டு வந்து, மறுபடியும் காரியத்தில் இறங்கினாள்.

2

பத்மநாபன் சாப்பிட்டு விட்டு மேல் மாடிக்கு வந்தான் படுக்க. அவனுக்குப் பின்னாலேயே சீதை வெற்றிலை பாக்குத் தட்டுடன் வந்தாள். பத்மநாபன் ஆர அமரப் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டான். மெல்லிய காற்று மேனியைத் தழுவியது. வெற்றிலையை மடித்துக் கொடுத்துக் கொண்டே சீதை மெல்லப் பேச ஆரம்பித்தாள்:

"உங்கள் தம்பி வந்திருந்தார்"

"எங்கே?"

"இங்கே தான்"

"எப்பொழுது?"

"காலையில்"

"ஆச்சரியந்தான். எதற்காக வந்தான்?"

"ஒரு பத்து ரூபாய் அவசரமாக வேண்டியிருந்ததாம்"

"என்னைப் பார்க்காமலே போய் விட்டானே?"

"ஏதோ நிரம்ப அவசரம் என்று சொன்னார்"

"நீ சுத்த மக்கு; நான் வருகிற வரைக்கும் இருக்கச் சொல்கிறது தானே?"

"என்னிடம் பணம் இருந்தது; கொடுத்தேன்."

"ஹூம்"

"உடனே போய் விட்டார்"

"வேறு ஏதாவது சொன்னானா?"

"இல்லை"

"ரொம்பவும் இளைத்துப் போயிருக்கிறானோ?"

"ஆமாம்"

"அவனுக்கு ஆயிரம் தடவை சொல்லி விட்டேன்; கேட்டால் தானே"

"நான் கூடச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்"

"சொய்கிறது தானே"

"அதற்குள் தான் அவர் போய் விட்டாரே!"

"ஒரு வேளை, நீ சொன்னால் கேட்பான்"

"நிச்சயம் கேட்பார்" என்றாள் துள்ளி விழுந்து.

பத்மநாபன் திரும்பினான்.

மங்கிய ஒளிச் சிதறலிலே அவள் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் வழக்கம்



"கபடி அரக்ஷகாயா"
சிங்களப் படத்தில் ஒரு காக்ஷி.

விந்தியராணியில்

ஒரு காக்ஷி



திருமழிசை ஆழ்வாரில் M. M. தண்டபாணி தேசிகர்

போல் தோய்ந்திருக்கும் அலுப்பு இல்லை... விரியாத மலரை விரிய வைப்பது போல், அலுத்துக் கிடக்கும் அதமுக மலரை, அந்த எண்ணம் விரித்தது. பத்மநாபன்...... உண்மைதானே!

அவன் தளர்ந்து போனவன்...

அவன் பார்வை தன் மேல் கூர்மையாக விழுவதை அவளும் கவனிக்காமல் இல்லை. முகத்தில் திடீரென்று தோன்றி விட்ட மகிழ்ச்சியை மறைக்க அவள் முகத்தைத் திருப்பினாள். அவள் முயற்சி அவனுக்குத் தெரிந்து விட்டது. இந்தப் பைத்தியக்காரத் தனத்தைப் பார்த்து விட்டு மெல்லச் சிரித்துக் கொண்டே பத்மநாபன் மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

விட்டல் ''ஞானசௌந்தரி'' கைகள் வெட்டப்பட்ட பின்

அவன் குரல் திடம் தோய்ந்திருந்தது. வார்த்தைகள் அழுத்தமாக விழுந்தன. அவள் முகம் மலர்ந்தது. திடீரென்று லேசாகச்சாய்ந்திருந்தவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் கண் மடல்கள் அகல விரிந்தன. இதைப் பத்மநாபன் மேலோட்டமாகப் பார்த்தாள். ஆனால், ஏனோ அது அவனுக்கு விகாரமாகப் படவில்லை.

''சரி நாளைக்கு வரச் சொல்கிறேன்; நீ சொல்லு'' என்றான் பத்மநாபன் திரும்பி.

''சரி''



சாதாரண வாழ்க்கையில் ஸ்ரீவாதன் இவ்வளவு நடிப்புத் திறன் இருக்கையில் ''கன்னிகா''வில் நக்ஷத்திரப் பதவியை அடைந்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

3

[ஏழு நாட்களுக்குப் பிறகு—]

இரவு மணி பதினொன்று.

மாடியில்......

பத்மநாபன் தனியே ஆகாயத்தைப் பார்த்து நிமிர்ந்து படுத்துக் கொண்டிருந்தான். நல்ல நிலவு. தென்னை ஓலைகள் கல கல வென்று உராய்ந்தன. ஜில் என்ற வாடை கலந்த மெல்லிய காற்று......

சீதை கீழே சிவராமனுக்குச் சாதம் போட்டுக் கொண்டிருந்தாள். ஏனோ அன்றைக்குச் சிவராமன் பதினொரு மணிக்குத்தான் வந்தான். அவனுக்குச் சாப்பாடு போட்டு விட்டுத் தான் அவள் சாப்பிட வேண்டும்! பத்மநாபன் ஏற்கனவே சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போய் விட்டான்.

பத்மநாபன் சிந்தித்தான்:

தன் மனைவி சொல்லைக் கேட்டு, தன் தம்பி தன்னோடு வந்திருப்பது பத்மநாபனுக்குக் கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. தன் வார்த்தைகளைக் காட்டிலும், தன்மனைவியின் வார்த்தைகளில் அப்படி என்ன மோஹன சக்தியிருக்கிறது என்பது தான் அவனுக்குப் புரியாமல் இருந்தது. "நீங்கள் மட்டும் இங்கே வந்து விடுங்கள்; உங்கள் உடம்பைப் பத்தரை மாத்துத் தங்கமாக மாற்றி விடுகிறேன்" என்று தானே சொன்னாள். பயல் உடனே ஓடி வந்துவிட்டானே! இந்தப் பெண்களிடத்திலே அப்படி என்ன தான் இருக்கிறதோ? பத்மநாபன் இதைக் கொஞ்சம் சிந்திக்கத்தான் சிந்தித்தான். ஆனால், அதிகமாகச் சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொள்ள வில்லை! எப்படியாவது தன தம்பி தன்னோடு வசிக்க ஒப்புக்கொண்டு விட்டானே என்ற மகிழ்ச்சிதான் அவனுக்கு மேலோங்கிநின்றது...

கீழே கடிகாரம் மணி பன்னிரண்டு அடித்தது!

இன்னும் சீதை மேலே படுக்க வரவில்லை.

பத்மநாபன் புரண்டு படுத்தான்.

நிறைந்து கிடக்கும் மேகக் குவியலிலே நிலவு எங்கே புதைந்து கிடந்ததோ? வானம் இருண்டு வந்தது. குளிர் காற்று இறைந்தது. இருந்தாலும் பத்மநாபன் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. அவனுக்கு ஒரே அலுப்பு...

அவன் படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தான்.

பதினேழு நாட்களுக்குப் பிறகு......

காவேரி யாற்றங் கரையில் பத்மநாபன், சிவராமன், சீதை மூவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

எங்கோ ஓரிடம்...

தண்ணீர் இருகரையும் புரண்டு ஓடியது. படிக்கட்டுகள் இருக்கும் இடமே தெரியவில்லை. தண்ணீர் நொங்கும் நுரையுமாகக் கொப்புளித்து வாரியடித்துக் கொண்டு வந்தது. கூட்டத்திற்குக் குறைவு இல்லை. நிறைய இருந்தது.

பத்மநாபன் குளிப்பதற்கு மெல்லத் தண்ணீரில் இறங்கினன். சிவராமன் புறத்தில் இருக்கும் மண் மேட்டில் அசையாமல் நின்று கொண்டிருந்தான். சீதை பத்மநாபனுக்குக் கொஞ்சம் தூரத்தில் நகைகளை எல்லாம் கழட்டிவிட்டுக் குளிப்பதற்குத் தயாராக இருந்தாள். ஆனல், தண்ணீரில் இறங்குவதற்குப் பயம்!

சிவராமன் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டே "சீதை வாயேன் குளிக்க" என்முன்.

"ஐயோ நான் மாட்டேன்"

"சீ அசடு...."

"நான் இங்கேயே தண்ணீர் இறைத்து ஊற்றிக் கொள்கிறேன்; எனக்கு அங்கே வரப் பயமாக இருக்கிறது."

"சீ...சொன்னல் கேளு...இன்றைக்கு நன்ருகக் குழிக்க வேண்டும், வா"

"நான் மாட்டேன்"

"சொன்னல் கேளு; நான் உன் கையைப் பத்திரமாகப் பிடித்துக் கொள்ளுகிறேன்."

"சீதை யோசித்தாள்."

"பத்மநாபன் கரைக்கு வந்தான். சீதையின் கையைப் பிடித்தான். உடும்புப் பிடி.... அவள் உடம்பு பயத்தால் ஆடியது. அவள் கை—பூங்கை—அவன் உடும்புப்பிடியில் நசுங்கிக் கொண்டிருந்தது. சீதையைத் தர தர வென்று தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டு போனுன் பத்மநாபன்.

இடுப்பளவு தண்ணீர்.......

பிடி தளரவில்லை!

மார்பளவு தண்ணீர்....

பிடி தளரவில்லை!

கழுத்தளவு தண்ணீர்......

பிடி தளரவில்லை!

"ஐயோ..நான் சாகிறேனே"

"சாகத்தான் உன்னை இழுத்துக் கொண்டு போகிறேன்"

அவளுக்குப் பிழைத்துப் போக ஆசை இருந்தது; அவன் கையை உதறி வெளியே இழுத்தாள்.



சம்சாரநௌகாவில் வேறு ஒரு காக்ஷி

அவன் கை அசைந்தால் தானே?

அவன் உடும்புப் பிடி தளர்ந்தால்தானே?

ஒரு சுழல்....

தலைகள் மறைந்தன.

சிவராமன் இமையாடாமல் இரும்புப் பட்டா மாதிரி நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் அந்தத் தலைகள் முழுகிப்போன அந்தச் சுழலில் நிலைகுத்தி நின்றன.

காரணம்?

அவனுக்குத் தெரியாமலா இருக்கும்?

நமக்குப் புரியவில்லை!

ஆனல், அவனுக்குப் புரிந்துதான் இருந்தது!

✲

ஒற்றுமை வேண்டும்

ஜி. பட்டு அய்யர்

மேல் நாடுகளில் பிலிம் தொழில் முக்கிய ஸ்தானம் வகித்து வருகிறது. அவர்கள் தங்கள் தேசத்தின் கல்வி அபிவிருத்திக்கும் கைத்தொழில்களைப் பற்றியும், வியாபாரங்களைப் பற்றியும் பிறதேசங்களுக்கு அறிமுகப் படுத்தி அதன் மூலம் தம் தேசம் முன்னேற்ற மடையப் பிரசாரம் செய்யவும் சாதக கருவிகளாகப் பிலிம்களை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

நம் தேசத்துப் பிலிம் தொழில் பத்து வருஷங்களுக்கு முன் இருந்ததை விட இப்பொழுது எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு தேசத்துக் கைத்தொழில் விருத்தியாக வேண்டுமானால் அதற்கு அரசாங்கத்தார் உதவி புரிந்தாலொழிய முன்னேறுவது சிரமமான காரியம். சுதந்தரம் வந்த பிறகாவது நம் பிலிம் தொழிலுக்கு நற்காலம் பிறக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால் தற்போது இருக்கும் நிலைமையில் இவ்வளவு காலம் குழந்தைப் பருவமாக இருந்து நம்மால் வளர்க்கப்பட்டுப் பால்ய பருவமடைந்திருக்கும் நம் பிலிம் தொழிலை நாம் பறிகொடுக்கும்படி நேரிடும்போல் இருக்கிறது. சமீபத்தில் நமது சென்னை கவர்மெண்டாரால் சுமத்தப்பட்டிருக்கும் தமாஷா வரியைக் கவனிக்கும்போது பட முதலாளிகள் மீள முடியுமென்று தோன்றவில்லை. ஒரு படம் எடுப்பதற்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன, எவ்வளவு லக்ஷக்கணக்கில் ரூபாய் செலவாகிறது. அவ்வளவு சிரமத்துக்கும் செலவுக்கும் பிறகும், படம் நன்றாக இருக்கிறதென்று ஜனங்களால் ஆமோதிக்கப்பட்டு வசூலானால் தான் முதலாளிகள் முதலைக் கண்டு பிடிக்கலாம். இல்லாவிட்டால் தலையில் கையை வைத்துக்கொண்டு போகவேண்டியது தான். இந்நிலையில் பிலிம் தொழிலை முன்னேற்றமடையச் செய்ய அரசாங்கம் உதவி புரியாவிட்டாலும் அதிகமான வரிகளைச் சுமத்தாதிருப்பது மேல்.

இதற்கெல்லாம் காரணம் பட முதலாளிகளுக்குள் ஒற்றுமை இல்லாததேயாகும். எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று தென் இந்திய பிலிம் சேம்பர் ஒன்று ஏற்படுத்தியிருந்தும், எல்லோரும் ஏகமனதாகச் சேர்ந்து அங்கு கூடி யோசனை செய்து ஒரு காரியத்தைச் செய்ய முன் வருவதற்கு முயற்சி செய்யாதது வருந்தத்தக்க விஷயம். இப்படி அசட்டையாக இவர்கள் இருந்து வருவது இப்பொழுது தெரியாது. நாளடைவில் அவரவர்களே இதை அறிந்த பிறகுதான் தங்கள் தவறுதலை உணர்வார்கள். இது ஒன்று மாத்திரமல்ல. இன்னும் எவ்வளவோ காரியங்களில் இவர்கள் ஒற்றுமையாக இருந்து தொழிலை நடத்தினால் ஒவ்வொருவருக்கும் லாபம் கிடைப்பதுடன், தொழிலில் உள்ள டெக்னீஷன்கள், நடிகர், நடிகை முதலிய யாவரும் முன்னேற்றமடைய உபகாரமாயிருக்கும். இதைப் பட முதலாளிகள் கவனிப்பார்களா.

✲

இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்

யு. எஸ். ஏ. மோஷன் பிக்ச்சர் அஸோஸியேஷன் தலைவர் ஸ்ரீ எறிக் ஜான்ஸ்ட்டன் வருகிற பெப்ருவரி மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்வார். நேருஜியையும், காந்திஜியையும் சந்திக்க எதிர்பார்க்கிறார். பாகிஸ்தான் செல்லவும் ஜின்னாவைப் பேட்டி காண்பதும் இவர் விருப்பம். லண்டன், பாரிஸ், ரோம் இம்மூன்று நகரங்களிலும் அங்குள்ள அரசாங்கத் தலைவர்களுடன் சில விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பார்.

✲

ஸைலஜாவின் கண்ணீர்

ஆர். வி. பார்ஸி

சினிமா பிரபஞ்சத்தில் அதிகப் பிரயாசையின்றி சுலபமாகக் கிடைக்கக்கூடிய வேலை எக்ஸ்ட்ராவாக நடிப்பதுதான் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அதற்கும் ஓரளவு சிபாரிசும் தூப தீப நைவேத்தியங்களும் நடத்தியாக வேண்டியிருக்கிறது என்பது மறுக்க முடியாது.

சினிமாவில் சேர்ந்து நடிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கித் தவித்துத் தவம்கிடந்தவள் பார்வதி. அவளது இடைவிடாத முயற்சியின் பலனாகவும் அவளுக்கு இயல்பாக அமைந்திருந்த அழகான அங்க அமைப்புகளினாலும், அவளுக்கு தூர உறவினரான ஒரு ஸ்டுடியோ சிப்பந்தியின் உதவியாலும் அவளுக்கு எப்படியோ ஒரு படத்தில் தோழியாக நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

வாய்த்த சந்தர்ப்பத்தை வகையாகப் பயன்படுத்திக் கொண்டாள் பார்வதி. தன் பெயரையும் சினிமா நாகரீகத்திற்கு அனுசரணையாக ஸைலஜா என்று மாற்றிக் கொண்டாள். அவள் நடிப்பும் கொஞ்சம் சுமாராக இருக்கவே தொடர்ந்து சில படங்களில் தோழியாக நடிக்க அவளுக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எங்கள் தெருவுக்கு அடுத்த தெருவில் அவள் குடியிருப்பதால் அவளைப் பற்றிய செய்திகளெல்லாம் அவ்வப்பொழுது என் காதில் விழுவதுண்டு.

பதி பிக்ச்சர்சாரின் ஜீவ ஜோதியில் ஒரு காக்ஷி

சாமரம் வீசுவது, பூ, பழத்தட்டுகளுடன் அரண்மனைக்குச் செல்வது, அரசிளங் குமரியுடன் உலாவச் செல்வது, அரசகுமாரியின் சார்பில் அவள் காதலனின் 'சிந்தையை அறிந்துவா' தூதுச் செல்லுதல் இது போன்ற சில்லரை நடிப்புகளில் இதுவரை ஏழெட்டுப் படங்களுக்கு மேல் நடித்து விட்டாள் அவள். தப்பித்தவறி வாய்கிறந்து இரண்டொரு வாக்கியங்கள் பேசவும் அவளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

எப்பொழுதாவது ஒரு சோக ரஸமான காக்ஷி பிடிக்கப்பட்டு, அதில் பார்வதிக்கும்—அல்ல அல்ல ஸைலஜாவுக்குப்—வேலையுண்டு என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் காக்ஷியை பிடிக்கும் நாள் பூராவுமே, காலையில் படுக்கையை விட்டு எழுந்தது முதல் காட்சி பிடிபட்ட பின்னரும் கூட கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுவாள் அவள். இல்லாவிட்டால் "மூட்" கெட்டுப் போய்விடும், என்பது அவள் எண்ணம்.

ஒரு முறை அப்படிப்பட்ட சோகக் காட்சி ஒன்றைப்

பிடித்து முடித்து, அதை ஸ்டுடியோத் திரையில் போட்டு 'ட்ரையல்' பார்த்துக் கொண்டிருந்த போது பாவம் ஸைலஜாவின் முகத்தில் ஒரே கலவரமும், குழப்பமும், ஏமாற்றமும் தென்பட்டன.

மறு தினம் ஸ்டுடியோவில் அவளைச் சந்திக்கையில் அவளுடைய முகத்தில் இன்னமும் சோக பாவம்—இல்லை அசட்டு அழுகை உணர்ச்சி—திகழ்ந்து கொண்டிருந்தது.

அவளைக் 'காமிராமேன்' கிண்டல் செய்ய ஆரம்பித்தார்.

"என்னம்மா, என்ன ஆயிற்று இன்னும் அழுது கொண்டிருக்க? காக்ஷி முடிந்து, ட்ரையலும் போட்டுப் பார்த்து ஆயிற்றே! போதும் அம்மா போதும் நிறுத்துங்கள் உங்கள் அழுகையை. உங்களைப் பார்த்தால் எனக்கும் அழ வேண்டும் என்று தோன்றுகிறது" என்றார்.

"ஏன் என்னை வீணுகக் கேலி செய்கிறீர்கள் அண்ணு? மாடாக உழைச்சு, செத்துச் சுண்ணாம்பாகி வேலை செய்தும் பயன் கிட்டவில்லையே! சோகக் காட்சியில் நான் எவ்வளவு நன்ருக அழுதேன் ஐயா! எவ்வளவு கண்ணீர் ஆருகப் பெருக விட்டேன்! ஆனல் படத்தில் ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூடக் காண முடியவில்லையே" என்று அங்கலாய்த்தாள் ஸைலஜா. அளவு கடந்த துக்கத்துடன் காமிராமேன் தன்னுள் சிரித்துக் கொண்டு அவளைச் சமாதானப் படுத்தினர்.

பிரபல டயரக்ட்டர் நடிகர் ஒய். வி. ராவ்

சமீபத்தில் கடலூரில் அமர்க்களமாக அரங்கேற்றம் நடத்திய பேபி தங்கமணி வருங்காலத்தில் நடனக் கலையில் தேர்ந்த நக்ஷத்திரமாக விளங்க வேண்டியவள். அவளுக்கு நமது பூரண ஆசிகள்.

"பூ! இதுக்காகத்தானு இவ்வளவு வருத்தப்படுறீர்கள்! நீங்கள் அழுததும் மூன்று காலன் கண்ணீர் விட்டதும் வாஸ்தவம தான். நானும் தான் அக்கரையோடு ஒரு கண்ணீர் முத்தும் சிந்திவிடாதபடி ஜாக்ரதையாகப் படம் எடுத்தேன். ஆனல் படத்தின் நெகடிவ்வைக் கழுவும் போது நீங்கள் சொரிந்த கண்ணீர் முழுவதும் அப்படியே கரைந்து போயிற்று. இதற்கு யார் என்ன செய்வது? அடுத்த படத்தில் 'நெகடிவ்'வைக் கழுவ வேண்டாம் என்று ஏற்பாடு செய்து விடுகிறேன் லாபரடரி சிப்பந்தியிடம் சொல்லி. நீங்கள் வருத்தப்பட வேண்டாம் அம்மா" என்றார் காமிராமேன்.

"அப்படியே செய்யுங்கள் அண்ணு, உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு," என்று நன்றி தொனிக்கும் குரலில் கூறினள், வெளுத்ததெல்லாம் பால் என நம்பும் அந்த வெகுளி எக்ஸ்ட்ரா நடிகை ஸைலஜா.

ஸ்டுடியோ செய்திகள்

என்ன சார்! சினிமா வானில் மேகங்கள் படர்ந்து, இடியும் மின்னலுமாக யிருக்கின்றதே என்றார் நண்பர்!

உடன் "ஆம்! ஆனால் 1948-ம் வருடமாகிய பலமான காற்றுத்தான் வந்து இந்த மேக மண்டலத்தையே சிதற அடித்து விட்டதே. பளிங்குமயமான வீதியின் நடுவே பிரகாசமான நக்ஷத்திரங்கள் மின்னத் தொடங்கி விட்டன. ஜுப்பிட்டரின் "ராஜகுமாரி" ஜெமினியின் "மிஸ் மாலினி" பக்ஷிராஜா "கன்னிகா" மாடர்ன் தியேட்டர்களின் "அபூர்வ சிந்தாமணி" போன்ற படங்கள்தானவை.

அவைமட்டுமா? விந்தியராணி, தேவதாஸி, ஜம்பம், கங்கணம், உதங்கர், போன்ற படங்களும் வெளி வந்து விட்டன.

மேலும், "ராமதாஸ்" "விஸ்வாமித்ரா" "ஞான சௌந்தரி", "திருமழிசை ஆழ்வார்", "பக்த ஜனா", "கும்பாரா" போன்ற படங்களும் இதோ வந்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றன.

இது இப்படியாக நமது தென்னிந்திய ஸ்டுடியோக்களில் எப்படி நிலைமை யிருக்கின்றது என்று பார்ப்போம்.

பிரகதி: அவர்களின் சொந்தப் படம் "ஏ 1." என்ற நாமதேயத்துடன் எல்லிஸ் ஆர். டங்கனின் டைரக்ஷனில் தயாராகி வருகின்றது. கந்தசாமி பிள்ளையின் கதை வசனம். "பட்டிக் காட்டானின் பட்டணப் பிரவேசத்தால்" ஏற்படக்கூடிய தமாஷ் கட்டங்கள் நிறைந்திருக்குமாம்.

இவர்களின் கூட்டுத் தயாரிப்பில்தான் ஸ்டார் கம்பைன்சாரின் 'சம்சார நௌகா' வும், பாரதி பிக்சர்ஸாரின் "மின்மினி"ப் படமும் தயாராகி வருகின்றது.

ஆர். கே. எஸ். பிக்சர்ஸின் "தேவ மனோஹரி"யும் இங்குதான் பிடிப்படப் போகின்றது. தவிரவும் இங்கு

சம்சார நௌகாவில் பந்துலுவும் பிரேமாவதியும்



பதி பிக்சர்சாரின் ஜீவ ஜோதியில் ஒரு காக்ஷி

கந்தன் கம்பெனியாரின் "ஜீவகன்" ஷூட்டிங்கும் நடைபெற்று வருகின்றது.

இங்கிருந்து அதிவிரைவில் "ஜானு"வும், "கும்பாரா"வும் வெளிக்கிளம்பி சர்வஜனக் காக்ஷிக்குத் தயாரிகிவிடும்.

ஜெமினி: இவர்களின் செல்வக் குமரி "சந்திர லேகா" மார்ச்சு மாதம் 6-ம் தேதி தன் பவனியை துவக்குகின்ருளாம். அதோடு "ஞான சௌந்தரி," "ஔவை" "கோரா கும்பர்" ஆகிய மூன்று படங்களும் தொடர்ந்து பிடிபட்டு வருகின்றன.

நியுடோன்: இந்த ஸ்டூடியோவின் கூட்டாளியும், ஆர்ட் டைரக்டருமான நாகூரின் "ஞான சௌந்தரி" ஷூட்டிங் பிரமாதமாக நடை பெற்று வருகின்றது. மஹாலிங்கமும், எம். வி. ராஜம்மாவும் பிரமாதமாக நடித்திருக்கின்றனர். பாட்டு, படப்பிடிப்பு, நடனம் யாவும் பிரமாதமாக அமைந்திருக்கின்றதாம்.

இங்குதான் சின்னப்பாவின் மேற்பார்வையிலும், அவரையே கதா நாயகனாகவும் கொண்ட "மங்கையர்க்கரசி" தயாராகி வருகின்ருள்.

நக்ஷத்திரங்கள் நிறைந்து வெளிவர தயாராகிக் கொண்டிருக்கின்றது கிருஷ்ணு பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி". அது மட்டுமா? முருகன் டாக்கீசாரின் "ரெத்னகுமாரும்" எமெனஸ்கே பிலிம்சாரின் "நல்ல தம்பி"யும் தயாராகி வருகின்றது இங்குதான்.

சோபனசலா: இங்கு "காமவல்லி"யின் படப் பிடிப்பு முடிந்து, பாஸ்கர் பிக்சர்சாரின் அநுமதியைப் பெற்று வெளிவரக் காத்துக் கொண்டிருக்கிறது.

ஸ்டுடியோவின் சொந்தப் படங்களான "மதாலஸா" "மாயக் குதிரை"யும் கிருஷ்ணவேணியை கதாநாயகியாகக் கொண்டு, மீர்சாபூர் ராஜாவின் மேற்பார்வையில் தயாராகி வருகின்றன.

நெப்டியூன்: இவர்கள் "மஹாபலி"யை முடித்து அதிக விரைவில் வெளியிட்டுவிடப் போகின்ருர்களாம். இங்கேதான் [illegible]ரன் கம்பெனியாரின் "கோகுலதாஸி" ஷூட்டிங் நடைபெற்று வருகின்றது. "ராதிகா" "சுவர்ணமாலா" போன்ற தெலுங்குப் படங்கள் தயாராகி விட்டது. வெளிவரத் தயாராம் இவை.

பக்ஷிராஜா, கோவை: T. R. ராஜகுமாரி, T. R. மஹாலிங்கம், வரதன், M S. சரோஜினி லலிதா, பத்மினி, கிருஷ்ணன், மதுரம் போன்ற நக்ஷத்திர நடிகர்களைக் கொண்டு "பவளக்கொடி"யை ஸ்ரீராமுலு நாயுடு இங்கு தயாரிக்கப் போகின்ருராம்.

ஜூபிடர்ஸ்: இவர்களின் அபிமான புத்திரன் "அபிமன்யூ" தென்னுட்டில்

ஏப்ரல் மாதம் 6ம் தேதி திரையிடப்படுவானும். மேலும் 1948ம் வருடத்திலேயே "கிருஷ்ண விஜயம்," "வேலைக்காரி," "விஜயகுமாரி," "மோஹினி" போன்ற படங்களை பிடிதது முடித்துவிட்ட பின்னோடு "மனோஹரா" படப் பிடிப்பையும் ஆரம்பிப்பார்களாம். இவர்களின் கூட்டுத் தயாரிப்பில் தான், சேலம் ஷண்முகா பிலிம்ஸ், T. K. S. சகோதரர்கள் "பில்ஹணா"வை தயாரித்து வெளியிடவும் தேதி நிச்சயித்து விட்டார்களாம்.

மாடர்ன் தியேட்டர்ஸ்: 'அபூர்வ சிந்தாமணி'யின் வெற்றியைக் கண்ட டி. ஆர். சுந்தரம் அதேபோல் டி. ஆர். மஹாலிங்கத்தை பிரதான பாகத்தில் கொண்டு ஓர் கிராமியக் கதையை அடுத்தபடியாக தயாரிக்கப் போகின்றாராம். மேலும் பாரதிதாசன் கதை ஒன்றும் படமாக்கலாம் அதிவிரைவில் என்று தெரிகின்றது.

இங்கு செல்வம் பிலிம்சாரின் 'மாரியம்மன்' தயாராகி முடிந்து காக்ஷிக்கு தயாராகி விட்டது. இச்சா சக்தி, கிரியா சக்தியின் ஜனனம், மாரியம்மனின் தோற்றம் முதலியன தான் படத்தின் அடிப்படையான கதை. வசனம், பாட்டு, யாவும் நன்கு அமைந்திருக்கின்றனவாம் இப்படத்தில்.

"போஜன்" படப் பிடிப்பு தற்போது நடைபெற்றுவருகின்றது.

ஏ. வி. எம். காரைக்குடி: "வேதாள உலகத்தின்" சிருஷ்டி அநேகமாய் முடிந்து விட்டது. அதிவிரைவில் தென்னாட்டில் வெளியிட்டு விடுவோமென்கிறாராம் மேனா. ஒரே நடனமாயிருக்குமாம் படம். மஹாலிங்கத்தின் பாட்டு, (யோக) மங்களத்தின் நடிப்பு, தாரா சௌத்ரி, லலிதாபத்மினி, கமலா போன்றவர்களின் நாட்டியங்கள் யாவும் மேனா டைரக்ஷனில் இப் படத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

படத்தின் வெற்றிக்கு கேட்பானேன்.

"ராம ராஜ்யம்" போலவே

"பாரத்மிலாப்" தமிழில் "டப்" செய்யப் பெற்று வருகின்தாம்.

சித்ரகலா: அதிக விளம்பரமேயில்லாமல் "என் தாய்" என்ற சிங்களப் படம் தவமணி தேவியை பிரதான நடிகையாய்க் கொண்டு தயாராகி வருகிறது.

எப்படி சார்! நிஜமாக வா நம் சினிமா உலகம் தூங்குகின்றது?

மதன மாலா புகழ் ஸ்ரீமதி ரஜினியும் அவர் கணவரும்

வெற்றிகரமாக ஓடுகிறது!

ஜி. பி. நாராயணின்

மகத்தான புராணச் சித்திரம்

கங்கணம்

நடிகர்கள்:

கே. ஆர். ராமசாமி, மேனகா, பி. ஜி. வெங்கடேசன், பி. ஆர். மங்களம், மற்றும் பலர்

டைரக்ஷன்: **எஸ். கே. வாஸகம்**

உதவி டைரக்ஷன்: **டி. கே. பட்டாபிராமன்**

கதை: ஏ. டி. கிருஷ்ணசாமி

இசை: எச். ஆர். பி. சாஸ்திரி

பாட்டு: கம்பதாஸன்

வசனம்: சந்திரசேகர்

ஜி. பி. நாராயண் கம்பெனி

வாலாஜா ரோட், மவுண்டு ரோட், சென்னை

தயாராகிறது



T. S. பாலையா — S. D. சுப்பையா
K. K. பெருமாள் — V. V. S. மணி
காளி N. ரத்னம் — M. E. மாதவன்
E. R. சகாதேவன் — K. P. ஜெயராமன்
C. R. சாம்பமூர்த்தி — M. R. சந்தானலக்ஷ்மி
T. S. சகுந்தலா — R. பத்மா
P. S. ஞானம் — T. S. ஜெயா

செல்வம் பிலிம்ஸ்

மாரியம்மன்

டைரக்ஷன்: L. S. ராமச்சந்திரன்... சங்கீதம்: பலவான்குடி சாமா
கதைவசனம்: தஞ்சை ராமையாதாஸ்... பாடல்கள்: பாபநாசம் ராஜகோபாலய்யர்
ஸ்டுடியோ: மாடர்ன்.

RANGA STUDIO. — Kesavan

விபரங்களுக்கு: ஸ்ரீ செல்வம் பிலிம் கோ., எக்ஸ்டென்ஷன், சேலம்.

டிஸ்ட்ரிப்யூடர்கள் :

சேலம், கோவை, நீலகிரி :
லோகநாதா பிக்சர்ஸ், அரிசிபாளையம், சேலம்.

மைசூர், தென் கன்னடம் :
ஜெயமணி பிக்சர்ஸ், பெங்களூர் ஸிடி.

தென், வட ஆற்காடு, சித்தூர், செங்கல்பட்டு :
ராஜ ராஜேஸ்வரி பிலிம்ஸ், கடலூர் O. T.

K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா

திருச்சி

ரெத்தினவேலுத் தேவர் ஹாலில்

27-1-48 செவ்வாய் முதல் தினசரி

அற்புதமாய் அமைத்திருக்கும் சிற்பக்கலை
அரங்கில் புதுமையான மேடை
அமைப்புடன் புதிய நாடகம்

"மணமகள்"

எஸ். கே. சாமி

பாடல்கள்: நாரா. நாச்சியப்பன்

புதன், ஞாயிறு மாலை 6-30 மற்ற நாட்கள் இரவு 9-30

திங்கள் நாடகமில்லை

டிக்கட்: ரூ. 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0 & 0-6-0

வாடிக்கைக்காரர்களுக்கு எங்கள்

பொங்கல் வாழ்த்துக்கள்

★

தந்தி : மெட்டல்மெ போன் : 4275

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

★

மெட்டல், பேப்பர், ஸ்டேஷனரி
வியாபாரிகள், கமிஷன்
ஏஜண்டுகள்

★

134, தங்கசாலைத் தெரு,
சென்னை.

---

206 ஒப்பணக்காரத் தெரு,
கோயமுத்தூர்.

கோர்ட் ஹவுஸ், கார்னக் ரோடு,
டோபி தாலோ
பம்பாய்.

மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத் திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச் சிக்கலை மாற்றி ஜீரண சக்தியைக் கொடுத்து, உடலுறுதி பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்கு கைகண்ட மருந்து. நுரையீரலை வலுவாக்கி, ஆஸ்த்மாவை அறவே தீர்க்கிறது. ஈரல் கோளாறு, மலச் சிக்கல், பித்தாசயக் கோளாறு, மூச்சுத் திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றிற்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப்பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளை குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

மெஸர்ஸ். அப்பா அண்ட் கம்பெனி
கெமிஸ்ட்ஸ், சைனாபஜார், சென்னை.

Customers are requested to Communicate in English

ஆஸ்த்மா, ச்வாஸாசய
நோய்களுக்கு டாக்டர்கள்
விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.

கதையோ கதை

★

பாப்பாக்கள் விரும்பும்

★ வேடிக்கைக் கதைகள்

★ வேடிக்கைப் பாட்டுகள்

★ விடுகதைகள்

★ விளையாட்டுகள்

இன்னும் பாப்பாக்கள் விரும்பும் ஏராளமான பகுதிகள்
விரைவில் வெளிவருகிறது

●

விலையும் ஒரு அணா தான்

★

விபரங்களுக்கு:

கதையோ கதை

ராயப்பேட்டை :: சென்னை 14.

Edited, Printed & Published by Rama Thiagarajan, at Papa Press, Rayavaram, Pudukottah State



ராஜ மோடியான சம்பத்து

ரத்தினாபரணங்களை அணிவது ராஜ மோடியான சம்பத்து. ஆபரணங்கள் அழகுமட்டுமா செய்கின்றன?

உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும் ஆபரணங்களின் பொருள் மதிப்பு மாறுவதில்லை. சென்றவிடமெல்லாம் சிறப்புத்தான்! ஆபரணங்களைப்போன்ற சேமநிதி ஒன்று உண்டா?

கடந்த ஐம்பது வருஷ காலமாக இந்தியாவிலும் பர்மாவிலும் பொது ஜனங்களுக்கு திருப்தி யளித்து வரும் எங்கள் ஆபரண வியாபாரம் நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது. நாணயத்துக்கும் நீடித்த சௌந்தர்ய சம்பத்துக்கும் எடுத்துக் காட்டுகள் எங்கள் ஆபரணங்கள்.

ஸூராஜ்மல்ஸ்

313, எஸ்பிளநேட், மதராஸ்